# IMPORTANT POINTS
# ONE LINER




## SCHEDULE-1-LESSON-2

1. பண்பாடு என்ற சொல்லை தமிழில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் ? டி கே சிதம்பர நாதனார்

2. "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என்று கூறும் நூல் ? தொல்காப்பியம்

3. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கூறும் நூல் ? கலித்தொகை

4. பண்புடையார் பட்டுண்டு உலகம் என்று கூறும் நூல் ? திருக்குறள்

5. _________ என்பது மாந்தனது அக உணர்வு வளர்ச்சியையும் சீர்மையும் குறிப்பது ஆகும் ? பண்பாடு

6. _______ என்பது மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையை குறிப்பதாகும் ? நாகரீகம்

7. தமிழர் தோற்றம் பற்றி எத்தனை வகையான கருதுகோள்கள் உள்ளன ? 4 வகை கருதுகோள்

8. தமிழக பண்பாட்டின் தொன்மையை அறிந்து கொள்வதற்கு பெரிதும் துணை நிற்கும் இலக்கணநூல் ? தொல்காப்பியம்

9. பழந்தமிழரின் அகப்புற வாழ்க்கையைப் பற்றி தெளிவாக கூறும் நூல் ? தொல்காப்பியப் பொருளதிகாரம்

TNPSC MATERIAL

10. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடல் வரியின் ஆசிரியர் ? கணியன் பூங்குன்றனார்

11. சேர மன்னர்களுடைய வணிகமுறை ,ஆட்சிமுறை, போர்த்திறம் பற்றி கூறும் நூல் ? பதிற்றுப்பத்து

12. பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும் வையை ஆற்றின் சிறப்பையும் கூறும் நூல் ? பரிபாடல்

13. பத்துப்பாட்டில் எத்தனை நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும் ? 5 நூல்கள்

14. நிலவளம் காதலின் சிறப்பு ஆகியவற்றை பற்றி கூறும் நூல் ? குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு

15. காதலையும் வீரத்தையும் ஒருசேர பேசும் நூல்? நெடுநல்வாடை

16. பாண்டியன் நெடுஞ்செழியன் சிறப்பை பற்றி கூறும் நூல் ? மதுரைக்காஞ்சி

17. முட்டாச் சிறப்பின் பட்டினம் என்று கூறும் நூல் ? பட்டினப்பாலை

18. சமய அற கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கும் இரட்டை காப்பிய நூல் ? மணிமேகலை

19. எகிப்தும் பண்டைய இந்தியாவில் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்று கூறும் நூல் ? எரித்திரிய கடலின் பெரிப்ளூஸ்

20. பிளினி எழுதிய எந்த நூல் தமிழகத்தின் கடல் வாணிகம் பற்றி குறிப்பிடுகிறது ? உயிரியல் நூல்

21. ஸ்ட்ராபோ மற்றும் தாலமி எழுதிய எந்த நூல் தமிழகத்தின் கடல் வணிகம் பற்றி குறிப்பிடுகிறது ? பூகோள நூல்

22. பசியைப் இணையாக உருவகம் செய்து அதை போக்க வேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் ? மணிமேகலை

23. அரேபியாவிலிருந்தும் கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தன எனக் கூறும் நூல் ? பெரிப்ளூஸ்

24. அரிசி என்னும் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் _______ என்று அழைக்கப்படுகிறது ? அரிஸா

TNPSC MATERIAL

25. கருவா என்னும் தமிழ்ச்சொல் __ என்று கிரேக்க மொழியில் அழைக்கப்படுகிறது ? கார்பியன்

26. சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற மதிப்பு உயர்ந்த பொருட்களின் பெயர்கள்? துகிம் மற்றும் ஆல்மக்

27. கீழ்க்கண்ட சேர நாட்டு துறைமுகப்பட்டினங்களை ரோமர்கள் எவ்வாறு குறிப்பிட்டனர் ?

A) தொண்டி ____ திண்டிஸ்

B) முசிறி _____ முசிரிஸ்

C) பொற்காடு ____ பகரி

D) குமரி ______ கொமாரி

28. கீழ்க்கண்ட தமிழகத்தின் கீழை கடற்கரை துறைமுகங்கள் நூல்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டன?

A) கொற்கை = கொல்சாய்

B) நாகப்பட்டினம் = நிகாமா

C) காவிரிப்பூம்பட்டினம் = கமரா

D) புதுச்சேரி = பொதுகே

E) மரக்காணம்= சோபட்மா

F) மசூலிப்பட்டினம்= மசோலியா

29. மிளகை " இந்திய மருந்து" என்று குறிப்பிட்ட புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர் ஹிப்பா கிரேட்டஸ்

30. சோழர்கால கிராம ஆட்சி முறையை தெளிவாக எடுத்துக் கூறும் கல்வெட்டு பராந்தக சோழனின் உத்திரமேரூர் கல்வெட்டு

31. கிராம ஊராட்சி சபை உறுப்பினரை தேர்ந்தெடுக்க சோழர் காலத்தில் பயன்படுத்திய தேர்தல் முறை ? குடவோலை முறை

32. பொன் செம்பு ஆகிய உலோக தகடுகளின் மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்கு ____ என்று பெயர் ? பட்டயங்கள்

TNPSC MATERIAL

33. வேள்விக்குடி பட்டயம், தளவாய்புரம் செப்பேடு, சின்னமனூர் சாசனம், சிவகாசி செப்பேடுகள் இவையெல்லாம் யார் காலத்து பட்டயங்கள் ? பாண்டியர் காலம்

34. திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தை செப்பேடுகள், லெய்டன் பட்டயங்கள் போன்றவை யார் காலத்து பட்டயங்கள் ? சோழர் காலம்

35. இரண்டாம் வரகுணனின் தங்க நாணயம் எந்த எழுத்தில் அவனுடைய பெயருடன் காணப்படுகிறது ? கிரந்த எழுத்து

36. எந்த கல்வெட்டில் அழியக்கூடிய பொருட்களான மரம் செங்கல் மண் சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள் கட்டப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டு கல்வெட்டு

37. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகத்து என்று கூறும் நூல் ? தொல்காப்பியப் பாயிரம்

38. வினையே ஆடவர்க்கு உயிரே என கூறும் நூல் ? குறுந்தொகை

39. முச்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட இடம் ?

A) முதல் சங்கம்= தென்மதுரை

B) இடைச்சங்கம் = கபாடபுரம்

C) கடைச்சங்கம்= இன்றைய மதுரை

40. தமிழர்கள் தம் வாழ்க்கையை ____ மற்றும் ___ என இரு கூறுகளாகப் பிரித்தனர் ? அகம் மற்றும் புறம்

41. பொருந்தா காதலை ______ எனவும் ஒருதலை காதலை _______ எனவும் கூறுவர் ? பெருந்திணை மற்றும் கைக்கிளை

42. தொல்காப்பியம் புறத்திணைகள் எத்தனை வகைகளாக பிரித்தது ? 7

43. புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகள் எத்தனை வகைகளாக பிரித்தது ? 12

44. மன்னனின் வீரம் கொடை புகழ் முதலானவற்றை சிறப்பித்து பாடுவது ? பாடாண் திணை

TNPSC MATERIAL

45. இரவில் வாயில் கதவை அடைக்கும் முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா என பார்த்து அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவு அளிக்கும் முறை எந்த நூலின் பாடல் மூலம் அறியலாம் ? நற்றிணை

46. பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறையை குறிப்பிடுவது ? மடை நூல்

47. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற பாடல் வரியின் ஆசிரியர் ? ஔவையார்

48. நடன மகள் _____ என அழைக்கப்பட்டாள் ? விறலி

49. நடன மகன் _____ என்று அழைக்கப்பட்டான் ? கூத்தன்

50. சிவன் ஆடுகின்ற கூத்து _____ என அழைக்கப்படுகிறது ? தாண்டவம்

51. ஜல்லிக்கட்டு ___ எனவும் அழைக்கப்படும் ? ஏறு தழுவுதல்

52. இந்திரவிழா பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல் ? சிலப்பதிகாரம்

53. பரதநாட்டியத்தில் ஒரு முக்கிய கூறான கை அசைவுகளை சமஸ்கிருதத்தில் எவ்வாறு அழைப்பர் ? ஹஸ்தம்

54. வள்ளிக்கூத்து முருகனை வழிபட்டு ஆடுபவரை எவ்வாறு அழைப்பர் ? குன்றக்குரவை

55. திருமாலை வழிபட்டு ஆடுபவரை எவ்வாறு அழைப்பர் ? ஆய்ச்சியர்

## OTHER IMPORTANTS POINTS

1) பண்டைய தமிழர்கள் எவற்றில் சிறந்து விளங்கினர்? பண்பாடு மற்றும் நாகரிகம்

2) ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஓர் __ உண்டு (பண்பாடு)

3) பண்பாடு என்ற சொல் எதில் இருந்து தோன்றியது? பண்படு என்ற சொல்

| பண்பாடு (Culture) | நாகரிகம் (Civilization) |
|---|---|
| பண்பாடு என்பது, மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிப்பது | நாகரிகம் என்பது, மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது |

TNPSC MATERIAL

4) தமிழர் தோற்றம் பற்றி எத்தனை வகையான கருதுகோள்கள் உள்ளன? நான்கு (குமரிக்கண்டம், தென் இந்திய பழங்குடிகள், ஆப்ரிக்காவில் இருந்து, மத்திய ஆசியா மற்றும் வட இந்தியா)

5) இசை பாடல் நூல் எது? பரி பாடல்

6) பண்டையத் தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் கூறும் வெளிநாட்டு நூல்கள் யாவை?

- ஸ்டிரோபோ - பூகோள நூல்
- பிளினி - உயிரியல் நூல்
- தாலமி - பூகோள நூல்

7) எந்த மன்னனுக்கு அளிக்கப்பட்ட மதிப்பு உயர்ந்த பொருள்கள் தமிழ் மொழியின் சிதைவுகள் ஆகும்? சாலமன் (துகிம்- மயில் தோகை, ஆல்மக்-அகில் மரங்கள்)

8) நம் தமிழக துறைமுகங்களை எவ்வாறு அழைத்தனர்?

- தொண்டி - திண்டிஸ்
- முசிறி - முசிரிஸ்
- பொற்காடு - பகரி
- குமரி - கொமாரி
- கொற்கை - கொல்சாய்
- நாகப்பட்டினம் - நிகாமா
- காவிரிப்பூம்பட்டினம் - கமரா
- புதுச்சேரி - பொதுகே
- மரக்காணம் - சோபட்மா
- மசூலிப்பட்டினம் - மசோலியா

9) பண்டைய தமிழகத்தில் இருந்து எந்த வகையான துணிகள் ஏற்றுமதி ஆகின? மஸ்லின்

10) சங்க காலத்து கல்வெட்டுக்கள் எங்கு காணப்படுகிறது? திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி

11) பல்லவர்கள் கால கல்வெட்டு காணப்படும் இடங்கள் யாவை? மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர், காஞ்சி

TNPSC MATERIAL

12) பாண்டியர்கால பட்டயங்கள் யாவை? வேள்விக்குடி பட்டயம், தளவாய்புரச் செப்பேடு, சின்னமனூர் சாசனம், சிவகாசி செப்பேடுகள்

13) சோழர் கால குறிப்பிடத்தக்க பட்டயங்கள் யாவை? திருவலாங்கட்டுப் பட்டயம், கரந்தை செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள்

14) மண்டகப்பட்டு கல்வெட்டு யாருடையது? மகேந்திரவர்மன்

15) அன்பின் வழிப்பட்டது – அகவாழ்வு

16) வீரத்தின் வழிப்பட்டது – புற வாழ்வு

17) அகத்திணை 5 யாவை? குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

18) பொருந்தாக் காதல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? பெருந்திணை

19) ஒரு தலைக் காதல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? கைக்கிளை

20) தொல்காப்பியத்தில் விருந்து என்ற சொல் என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது? புதியது

21) தொல்லோர் சிறப்பின் என்று விருந்துக்கு அடை கொடுத்தவர் யார்? இளங்கோவடிகள்

22) உணவு பற்றிய செய்திகள் உள்ள நூல்கள் யாவை? சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை

---

BOOK BACK – NEXT PAGE

TNPSC MATERIAL

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'பண்பாடு' என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் --------
அ) இளங்கோவடிகள் ஆ) டி.கே. சிதம்பரநாதனார்
இ) தொல்காப்பியர் ஈ) வ.உ.சிதம்பரனார்

2. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைக் கண்டறிக.
நிலம் – சிறுபொழுது
அ) குறிஞ்சி - யாமம்
ஆ) முல்லை - மாலை
இ) மருதம் - வைகறை
ஈ) பாலை - எற்பாடு

3. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.
அ) பாரி - முல்லைக்குத் தேர் ஈந்தவர்
ஆ) பேகன் - ஔவைக்கு நெல்லிக்கனி அளித்தவர்
இ) ஆய் அண்டிரன் - மயிலுக்குப் போர்வை தந்தவர்
ஈ) அதியமான் - நீல நாகத்தின் ஆடையை இறைவனுக்கு அணிவித்தவர்

4. பொருத்துக
அ) தொண்டி - 1. முஸிரிஸ்
ஆ) முசிறி - 2. கொமாரி
இ) பொற்காடு - 3. திண்டிஸ்
ஈ) குமரி - 4. பகரி

அ) அ-3 ஆ-2 இ-1 ஈ-4 ஆ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2
இ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3 ஈ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1

5. கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர்
அ) ஜி.யு. போப் ஆ) ஸ்டிராபோ
இ) அகஸ்டின் ஈ) ஹிப்பாகிரேட்டஸ்

6. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' - இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் -----
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) அகநானூறு

7. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
கூற்று: "உலகம் என்பது, உயர்ந்தோர் மேற்றே" எனத் தொல்காப்பியம் கூறுகிறது.
காரணம்: நல்ல வழிமுறைகளைப் பின்பற்றிப் பண்பாட்டில் சிறந்து விளங்குபவர்களே உயர்ந்தவர்கள்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

TNPSC MATERIAL

8. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை
அ) 5 ஆ) 7 இ) 9 ஈ)10

9. பொன், செம்பு ஆகிய உலோகங்கள் மீது பொறிக்கப்படுகின்ற எழுத்துகள் --------------
அ) ஓலைச்சுவடிகள் ஆ) பட்டயங்கள் இ) செப்பேடுகள் ஈ) சாசனங்கள்

10. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) தொல்காப்பியம் கூறும் புறத்திணைகளின் எண்ணிக்கை பன்னிரண்டு.
2) புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை.
3) மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலியவற்றைச் சிறப்பித்துப்பாடுவது வாகைத்திணை
4) பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்று கூறுவர்.
அ) 2, 4 சரி ஆ) 1, 3சரி இ) 2, 3சரி ஈ) அனைத்தும் சரி

11. சோழர்காலக் கிராம ஆட்சிமுறையைப் பற்றி அறிய உதவும் கல்வெட்டு
அ) மண்டகப்பட்டு ஆ) தளவானூர் இ) மாமண்டூர் ஈ) உத்திரமேரூர்

**விடைகள் :**

**1.ஆ, 2.ஈ, 3.அ, 4.3142, 5.ஈ, 6.இ, 7.ஆ, 8.அ, 9.ஆ, 10.அ, 11.ஈ**

TNPSC MATERIAL

# IMPORTANT POINTS ONE LINER

## அலகு 3 தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

TNPSC MATERIAL KRISHOBA

### SCHEDULE-17-LESSON-3

1. மனமொத்த இருவருக்கிடையே தோன்றும் காதல் நிலைபேறு உடையதாக அமையும் எனக் கூறும் நூல் ? தொல்காப்பியம்

2. "செம்புலப் பெயல் நீர் போல" என்ற பாடல் வரி அமைந்துள்ள நூல் ? குறுந்தொகை

3. "நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர் என்றும் என் தோள் பிரிவு அறியலரே" என்ற பாடல் வரியின் நூல் ? நற்றிணை

4.________ "யாக்கைக்கு உயிர் இயைந்து அன்ன நட்பின்" என்ற பாடல் வரியின் நூல் ? அகநானூறு

5. "உயர்நிலை உலகம் அமிழ் தோடு பெறினும், பொய்சேண் நீங்கிய வாய் நட்பினையே" என்ற பாடல் வரியின் நூல் ? மதுரைகாஞ்சி

6. வாய்மை நிறைந்த நட்பே தூய்மையானது சிறந்தது தகுதியானது என்று கூறிய ஆசிரியர் ? மாங்குடி மருதனார்

7. அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்தவர் ? அதியமான்

8. கோப்பெருஞ்சோழன் உடன் வடக்கிருந்து உயிர் விட்டவர் ? பிசிராந்தையார்

9. பாரின் இன்ப துன்பங்களை பகிர்ந்து கொண்டவர் ? கபிலர்

10. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக கருதி உதவுதல் பற்றி கூறும் ஆசிரியர்? நல்லந்துவனார்

11. உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான் என்று கூறிய ஆசிரியர்? நல்வேட்டனார்

12. உறவினர் கெட வாழ்பவன் இன் பொலிவு அழியும் என்று கூறியவர் ? பெருங்கடுங்கோ

13. "பொய்யா செந்நா" என்ற பாடல் வரியின் நூல் ? புறநானூறு

14. பொய்படுபு அறியா வயங்கு செந்நாவின் ? பதிற்றுப்பத்து

15. "பிழையா நன்மொழி" என்று வாய்மையையும், "பொய் பொதி கடுஞ்சொல்" என்று பொய்மையும் பற்றி கூறும் நூல் ? நற்றிணை

16. விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்பலும் ஒரு தலைவி ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது ? நற்றிணை

17. விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை " விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை" என்று கூறியவர் ? பெருங்குன்றூர் கிழார்

18. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" இந்த பாடல் வரியின் ஆசிரியர் ? ஔவையார்

19. பழந்தமிழ் வேந்தர்களும் ஒருவரும் ஒவ்வொரு மரத்தை தான் வெற்றியை சிறப்பிக்கும் மரமாக போற்றி வந்தனர். அதற்கு ______ என பெயர் ? கடிமரம்

20. ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன் தன்னை நாடி வந்தவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை " வால்மீன் பல பூப்பின் ஆனாது மன்னே" என்று கூறியவர் ? முடமோசியார்

21." அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்ற பாடல் வரியின் நூல் ? புறநானூறு

TNPSC MATERIAL
KRISHOBA

22. " நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற பாடல் வரியின் நூல் ? புறநானூறு

23. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் மொத்தம் எத்தனை? 11

24. திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதிநூல் ? நாலடியார்

25. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழி கூறும் இரு நூல்கள் ? திருக்குறள் மற்றும் நாலடியார்

26. நாலடியார் என்ற நூலை பாடியவர்கள் ? சமண முனிவர்கள்

27 நாலடியார் என்ற நூல் யாரால் தொகுக்கப்பட்டது ? பதுமனார்

28. ஔவையார் பாடிய நூல்கள் 4 கூறுக? ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

29. தொல்காப்பியத்தின் வலி நூலாக விளங்கும் இலக்கண நூல் ? நன்னூல்

30. ஆசிரியர், நூலை மாணாக்கருக்கு கற்பித்தல், மாணாக்கர் கற்றுக் கொள்ளல் ஆகியவை பற்றி கூறும் நூல் ? நன்னூல்

31. நன்னூல் யாரால் இயற்றப்பட்டது ? பவணந்தி முனிவர்

32. நன்னூலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ? 2

33. காப்பிய மரபில் முதன்மை இடத்தைப் பெற்றிருக்கும் நூல் ? சிலப்பதிகாரம்

34." நரகன் உயிருக்கு நல்லுயிர் கொண்டு பரகதி இழக்கும் பண்பு இங்கில்லை " என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் ? சிலப்பதிகாரம்

35. உலகில் நடைபெறும் பல குற்றச் செயல்களுக்கு பசிப்பிணியை காரணம், அதை போக்குவதன் மூலம் குற்ற செயல்களை தடுக்க முடியும் என்பது எந்த நூலின் மையப் பொருளாகும் ? மணிமேகலை

TNPSC MATERIAL KRISHOBA

36. "கணிகை மகள்" என சோழ மன்னரால் குறிக்கப் பெற்றவர் ? மணிமேகலை

37. தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம் ? சீவக சிந்தாமணி

38. சோழப் பேரரசு எழுச்சி பெற்ற காலத்தில் தோன்றிய காப்பியம் ? கம்பராமாயணம்

39. சீவக சிந்தாமணி _______ சமயக் கருத்துக்களை தொகுத்துக் கூறுகிறது ? சமண சமயம்

40. சீவக சிந்தாமணியின் ஆசிரியர்? திருத்தக்க தேவர்

41. இந்திய மொழிகள் அனைத்திலும் காணப்படும் இதிகாசங்களில் ஒன்று? மகாபாரதம்

42. வில்லிபாரதம் பொறுமை என்னும் மரத்தை யார் மூலமாக வெளிப்படுத்தியது? தர்மன்

43. ஆசிரியர் கூறுவதை அப்படியே உள்வாங்கிக் கொண்டால் கால்பகுதி அறிவே கிடைக்கும், உடன் பயில்வோருடன் அதுபற்றி உரையாடினால் கால் பகுதியும், உடன் பயிலும் மாணாக்கருக்கு கற்றோர் நிறைந்த அவையிலும் விரித்துரைக்கும் போதும் மீதி அரைப்பகுதியும் ஆக அறிவு நிறைவடையும் என கூறும் நூல் ? நன்னூல்

44. "யானோ அரசன் யானே கள்வன்" என்ற பாடல் வரியின் நூல் ? சிலப்பதிகாரம்

45. களர் நிலத்திலே விளைந்தாலும் உப்பை, நல்ல விளை நிலத்தில் பிறந்த நெல்லுக்கு இணையாக கருதுவர் என்ற கொள்கையை எந்த நூல் எடுத்துரைக்கிறது? நாலடியார்

TNPSC MATERIAL KRISHOBA

"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை
(நற்றிணை 1: 1-5)

நட்பின் இயல்பு குறித்து

உயிர்ஓர் அன்ன செயிர் தீர் நட்பின்
(நற்றிணை 72: 3)

………, யாக்கைக்கு
உயிர் இயைந்து அன்ன நட்பின்
(அகநானூறு 339: 11-12)

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே
(மதுரைக் காஞ்சி – 196 -197)

மாங்குடி மருதனார்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"
(தொல்: பொருளதிகாரம்: 269)

TNPSC KRISHOBA MATERIAL

புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மை யோடு
இயைந்த வைகல் உளவா கியரோ
(புறநானூறு 190: 10-12)

"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்".
(கலித்தொகை,139:2-3)
நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண்
அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம் என்பதுவே
(நற்றிணை.210:7-9)
நல்வேட்டனார்.

பொய்யாச் செந்நா (புறநானூறு 168:19)

பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின்
(பதிற்றுப்பத்து. 58: 9)

'பிழையா நன்மொழி' என்று வாய்மையையும், 'பொய்பொதி கொடுஞ்சொல்' என்று பொய்மையையும் நற்றிணை குறிப்பிடுகிறது.
(நற்றிணை. 200).

TNPSC MATERIAL

நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே
(நற்றிணை 289: 2-3)

நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே
(பதிற்றுப்பத்து .63:6-7)

“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே
(நற்றிணை 142: 9-11)

அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கும் வழங்கி மகிழ்வர். ஏதுமில்லா நிலையில் விதைத் தினையை உரலில் இட்டு, இடித்து, உணவளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 333).

விருந்தினருக்கு உணவளிக்க, வரகினைக் கடனாகப் பெற்று வருவதை ஒரு சங்கப்பாடல் காட்டுகிறது (புறம் 327).

TNPSC MATERIAL

உணவிடுவதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது

விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்புவதாலும் ஒரு தலைவிக்கு ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நற். 380).

விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை 'விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை' (புறம் 266). எனப் பெருங்குன்றூர்க்கிழார் கூறுகிறார்.

விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை 'விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை' (புறம் 266). எனப் பெருங்குன்றூர்க்கிழார் கூறுகிறார்.

ஆவும் ஆனியிற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்புக் கடிவிடுதும் நும்மரண் சேர்மின்

(புறநானூறு 9: 1-5)

TNPSC MATERIAL

……மாசுஇல்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்

பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
…. ……. ……… ………..
இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்
(சிறுபாணாற்றுப்படை: 235 – 245)

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
……….. …………. ………. ……….
(புறநானூறு 55: 10)
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே
(புறநானூறு 18: 28-30)

TNPSC MATERIAL

**உங்களுக்குத் தெரியுமா?**

**காவல் மரம்**

பழந்தமிழ் வேந்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மரத்தைத் தம் வெற்றியைச் சிறப்பிக்கும் மரமாகப் போற்றி வந்துள்ளனர். அம்மரம் இரவு பகலாக வீரரால் காவல் காக்கப்படுவதால், அதற்குக் 'கடிமரம்' எனப் பெயர். அம்மரத்தை வெட்டுப்படாமல் பாதுகாப்பது மானமுடைய வேந்தர்க்கு மறப்பண்பாகும். வேங்கை, புன்னை, வேம்பு முதலிய மரங்களைக் காவல் மரங்களெனப் போற்றி வந்துள்ளனர். வேந்தன் ஒருவன், பகை மன்னனை வெற்றிகொண்டதற்கு அடையாளமாக, அவன் நாட்டுக் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது மரபு.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.

(புறநானூறு 35 :27-29)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எனப் பாடிய பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல்அடி உணர்த்துகிறது.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

(புறநானூறு 195: 6-7)

TNPSC MATERIAL
KRISHOBA

உண்டால் அம்மஇவ் உலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே
(புறநானூறு 182)

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு''
என்னும் வெண்பா, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடுகிறது.

பொறாமை, பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகிய நான்கனையும் தீயதெனக் கருதிப் புறந்தள்ளி வாழ்வதே அறம் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (குறள் 35)

இல்லறத்தில் வாழ்பவர்கள் இவ்வறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால், அவ்வாழ்க்கை துறவறத்தினும் சிறந்தது என்பதனை,

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் 48)

TNPSC MATERIAL

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (குறள் 84)

நல்ல முக மலர்ச்சியோடு விருந்தினர்களைப் பேணுபவர்கள் இல்லத்தில் செல்வம் நிறைந்திருக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

கல்வியைப் பெறுபவனுக்கு எல்லா ஊரும் அவன் ஊரே, எல்லா நாடும் அவன் நாடே என்பதனை பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (குறள் 397)

செல்வம் தவறான இடத்தில் சேர்வதையும் நல்லவர்கள் அல்லல்படுவதையும் காட்டி, வள்ளுவர் இது இப்படித்தான் இருக்கும் என அமைதி அடையவில்லை; மாறாக,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (குறள் 169)

என்று கூறி அது முறையாக எண்ணிப் பார்த்துக் களையப்பட வேண்டும் என்கிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான் (குறள் 1062)

என்ற குறள் மூலம் பலர் நோக, சிலர் வாழும் ஏற்றஇறக்கம் கொண்ட வாழ்வை வழங்குவது இறை விருப்பம் என்றால், அந்த இறைவனே தேவையில்லை என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான குரலாகவே இக்குறட்பா விளங்குகிறது.

TNPSC MATERIAL KRISHOBA

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, இனியவைகூறல், செய்ந்நன்றி அறிதல் போன்ற நற்பண்புகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று கூறும் திருவள்ளுவர், இத்தகைய வாழ்க்கையைத் தெய்வத்தன்மை பொருந்தியது என்கிறார். இதனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

என்ற குறள்வழி அறிய முடிகிறது.

களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரை
தலைநிலத்து வைக்கப் படும்.

(நாலடியார் 133)

அறியாமை நீக்கி, அறிவை வளர்த்து மனிதரின் மனக்கோணலை நீக்குவதையே நூலின் மாண்பாக நன்னூலார் கருதுகிறார். (பொதுப்பாயிரம் – 25)

TNPSC MATERIAL

பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
நாளும் நாள் சாகின்றோ மால்
நமக்கு நாம் அழாதது என்னோ

(குண்டலகேசி -9)

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்.

(சிலப்பதிகாரம்–வஞ்சிக்காண்டம்- காட்சிக்காதை,100-104)

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்

(மணிமேகலை, ஆபுத்திரனோடு
மணிபல்லவமடைந்த காதை: 227- 230)

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண்இல்
கேள்வி ஆகும் முதல் திண்பணை போக்கி,
அருந்தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

(கம்பராமாயணம்: பாலகாண்டம் (நகரப்படலம் : 75)

TNPSC MATERIAL

………………. மதி அமைச்சர்
ஆய் அரசு அழிப்பினும்
குரவர் நல் உரை மறுக்கினும் பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும்
அவருடன் அழன்று பொர உன்னினும்
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்களே நரகில் எய்துவார்.

(வில்லிபாரதம் 2445)

என்பதே இதன் மையக்கருத்து. உறவினர்க்கு இடையே ஏற்படும் பொறாமைப் பண்பானது, வஞ்சகம், துரோகம் போன்ற இழி செயல்களுக்கு இட்டுச் சென்று போரில் ஈடுபட வைக்கிறது. அதுவே அழிவிற்குக் காரணமாக அமைகிறது. இதனை,

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்** (குறள் 168)

என்ற திருக்குறள் உணர்த்துகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் முடியாட்சியே நிலவிவந்தது. நாட்டையாளும் மன்னனே, தவறு செய்பவர்களைத் தண்டிக்கவும் செய்தான். மன்னன் தண்டித்தாலும், நீதி வழங்குவதற்கென அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அறங்கூறு அவையம் – பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி,492.
அறன்நிலை திரியா அன்பின் அவையம் – புறநானூறு, 71.
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறங்கெட அறியா தாங்கு– நற்றிணை, 400
அறங்கெழு நல்லவை– அகம், 93.
முறைபுடை அரசன் செங்கோல் அவையத்து - குறுந்தொகை, 276.
அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையம் - சிலம்பு 5 :135

அறநூல்களை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கியமையை 'அறங்கூறு அவையம்' என்னும் சொல்லாட்சி வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

TNPSC MATERIAL
KRISHOBA

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாய்மையை பிழையாநன்மொழி' என்று குறிப்பிடும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை
இ) அகநானூறு ஈ) புறநானூறு

2. சங்ககால பெண்பாற் புலவர் வரிசையில் இடம் பெறாதவரைத் தேர்ந்தெடுக்க?
அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார்
இ) காரைக்கால்அம்மையார் ஈ) நப்பசலையார்

ABHMIQ

3. ஆற்றுப்படை நூல்கள் இயற்றப்பட்டதன் குறிக்கோள்
அ) அரசர்களின் போர் தன்மையைப் பற்றி பாடுவதற்கு இயற்றப்பட்டது.
ஆ) பாணர்களைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
இ) பாடினிகளைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
ஈ) அரசர்களின் வள்ளல் தன்மையைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.

4. 'கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன்' என்பதை எக்கூற்று புலப்படுத்துகிறது?
அ) யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவன்.
ஆ) கணவனுக்கும் மனைவிக்கும் பெரும் பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வன்.
இ) 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாகத் தன்மகளுக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டியவன்.
ஈ) தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த இல்லோர் செம்மல்.

5. பின்வருவனவற்றுள் அக நூல் எது?
அ) நாலடியார் ஆ) குறுந்தொகை இ) இன்னாநாற்பது ஈ) திருக்குறள்

6. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
அ) வாக்குத்தவறாமை - 1. சபரி ஆ) செயல்வீரர் - 2. குகன்
இ) நட்பு - 3. அனுமன் ஈ) விருந்து - 4. தசரதர்
அ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1
இ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4 ஈ) அ-4 ஆ-3 இ-1 ஈ-2

7. பொருந்தாத இணையைச் சுட்டுக.
அ) தருமன் - பொறுமை ஆ) அர்ச்சுனன் - வில்லாற்றல்
இ) பீமன் - கொடை ஈ) துரியோதனன் - பொறாமை

8. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
அ) பாண்டு - 1. காந்தாரி ஆ) இராமன் - 2. மண்டோதரி
இ) இராவணன் - 3. சீதை ஈ) திருதராட்டிரன் - 4. குந்தி
அ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1 ஆ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2
இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4

9. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணை எது?
அ) கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் ஆ) ஔவையார் - அதியமான்
இ) பாரி - கபிலர் ஈ) கூனி - சகுனி

10. தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல்காப்பியம்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி ஈ) சீவகசிந்தாமணி

TNPSC MATERIAL

KRISHOBA ACADEMY

# BEGINNERS BATCH-2021

SCHEDULE-18-
LESSON-1

## 11TH-ETHICS- இந்தியப் பண்பாட்டின் இயல்புகள்

## IMPORTANT POINTS ONE LINER

1) மற்ற நாடுகளும் பின்பற்றக் கூடிய பண்பாட்டைக் கொண்ட நாடு எது? இந்தியா
2) பண்பாடு எந்தச் சொல்லில் இருந்து தோன்றியது? பண்படு
3) பண்படுத்துதல் என்பதன் பொருள் என்ன? செம்மைப் படுத்துதல் அல்லது சீர் படுத்துதல்
4) Cultura – culture (சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி) – இலத்தீன்
5) பண்பாடு என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்? டி கே சிதம்பரநாதர், 1937
6) பண்பாடு என்ற சொல்லை சிதம்பரநாதர் பயன்படுத்தினார் என்றக் கூற்றைக் கூறியவர் யார்? பேராசிரியர் வையாபுரி
7) பண்பாட்டின் வரையறைகள்

பண்பாடு என்பது பண்பட்ட, பக்குவப்பட்ட, சீரான, நேரிய வழியில் செல்லும் ஒழுக்கவியல் கோட்பாடாகும்.

8) நம் முன்னோர்கள் பண்பாடு என்பதை எவ்வாறு குறிப்பிட்டனர்? பண்பு, பண்புடைமை, சால்பு, சால்புடைமை, சான்றான்மை
9) பண்பாடு என்பது

TNPSC MATERIAL
KRISHOBA

பண்பாடு என்பது, விழுமியங்களின் தொகுதி. அது கலை, இலக்கியம், சமயம், சமூக நிறுவனங்கள் மற்றும் தனிமனிதச் செயல்பாடுகள் மூலம் வெளிப்படுகிறது.

பண்பாடு என்பது, மனிதனின் அகம். அதை, வெளிப்படுத்தினால் நாகரிகம். (Culture is the state of inner Man. His external expression is Civilization.) நாகரிகம் மாறுதலுக்கு உள்ளாகும். பண்பாடு, நிலைத்து நிற்கும்.

10) பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கூறிய நூல்? கலித்தொகை

11) பண்புடையார்ப் பட்டுண்டு உலகு என்று கூறும் நூல் எது? திருக்குறள்

12) பண்பாட்டை அறிந்து கொள்ள நாட்டுப்புற இலக்கியங்களும் பயன் படுகின்றன

13) வாழ்வியற்களஞ்சியம் பண்பாடு பற்றி

வாழ்வியற்களஞ்சியம்: "மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்ததே பண்பாடு".

14) ஆங்கில அகராதி பண்பாடு பற்றி

ஆங்கில அகராதி: "பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின்மூலம் உடல், உள்ளம், உணர்வு ஆகியன அடையும் வளர்ச்சியே பண்பாடு".

15) பண்பாடு பற்றி அறிஞர்களின் வரையறை

TNPSC MATERIAL KRISHOBA

"பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது, சமயம், பாரம்பரியம், பொருளாதாரம் ஆகியவற்றைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது".

– விவேகானந்தர்

"பண்படுவது பண்பாடு. பண்படுதல் என்பது சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்."

– தேவநேயப் பாவாணர்

TNPSC MATERIAL KRISHOBA

"பண்பாடு என்பது, பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகின்றது".

– செ. வைத்தியலிங்கம்



ஈ. பி. டெய்லர்

"மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு".

– ஈ. பி. டெய்லர்

மக்களின் சிந்தனையும், செயலும், நடவடிக்கையும் ஒவ்வோர் இனத்தவரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது பண்பாடாகும்.

– ரூத் பெனிடிக்ட்

"அவரவர் அன்றாடப் பணிகளை நேர்மையான மனநிலையுடனும் நேர்மையான நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில்தான் பண்பாடு மிளிர்கிறது".

– வால்டேர்

TNPSC MATERIAL

"பண்பாடு என்பது, இயற்கையின்மீதும் தன்மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு, மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மிகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது".

– எல்வுட் மற்றும் பிரௌன்

"மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு".

– சி. சி. நார்த்

"ஒருவர் தம் குண நலன்களை நிரப்புவதிலும், தம்மைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவா கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்".

– மேத்யூ ஆர்னால்டு

TNPSC MATERIAL
KRISHOBA

"பண்பாடு என்பது, மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. இந்த ஊடகத்தைக்கொண்டே மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்".

– மாலினோசுக்கி

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இஃது, அந்தந்தச் சமூகத்திற்கு மட்டுமே உரியது; உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது".

– ஆடம்சன் ஓபல்

"பண்பாடு என்பது, சீரிய வாழ்வுமுறை. இவ்வாழ்வுமுறை, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளினால் ஊக்குவிக்கப்படுகிறது".

– கே. எம். முன்ஷி

"தனிச் சிறப்புக்கூறுகள் நிறைந்த தனி இனச் சமுதாயத்தினரின் பண்புகளே பண்பாடு எனக் குறிப்பிடத்தக்கனவாகும்".

– அமெரிக்க மானிடவியலாளர்கள்

**16) இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொன்மைச் சான்றுகள் யாது?**

**இலக்கியங்கள், தொல்பொருள்கள், அயல்நாட்டுக் குறிப்புகள்**

**17) காலக்கண்ணாடிகள் என அழைக்கப்படுவது எது? இலக்கியங்கள்**

**18) இலக்கியச் சான்றுகள்**

**19) இலக்கியம் பற்றி**

TNPSC MATERIAL

> மனித வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டும் காலக் கண்ணாடியே இலக்கியம், ஆதலால், காலத்தின் கோலத்தை அந்தந்தக் கால இலக்கியங்களில் காணலாம் – ஜி. ஈ. டெரெவெலியான்

20) இலக்கியச் சான்றுகளை எத்தனை வகையாக பிரிக்கலாம்? எட்டு வகை
21) இலக்கியச் சான்றுகளில் மிகவும் தொன்மையானது? வேதங்கள்
22) இந்தியாவின் இருபெரும் இதிகாசங்கள் யாவை? இராமாயணம், மகாபாரதம்
23) யார் எழுதியவை தருமசாஸ்திர நூல்கள் என அழைக்கப்படுகின்றன? மனு, யஜ்ன வால்கியர், விஷ்ணு, பிரகஸ்பதி, நாரதர்
24) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் எத்தனை நூல்கள் அறக்கருத்துகளை வலியுறுத்திகின்றன? 11 நூல்கள் (திருக்குறள், நாலடியார், அறநெறிச்சாரம், ஆத்திச்சூடி போன்றவை)
25) பௌத்த சமய இலக்கியங்கள் எந்த மொழிகளில் எழுதப்பட்டுள்ளன? பாலி, பிராகிருதம்
26) பௌத்த சமய நூல்களின் பிரிவு யாது? சுத்த பீடகம்,விநய பீடகம், அபிதம்ம பீடகம்
27) சுத்த பீடகம் – புத்தரின் அறிவுரை
28) விநய பீடகம் – சீடர்களுக்கான சட்ட திட்டங்கள், ஞான ஒழுக்கங்கள்
29) அபிதம்ம பீடகம் – புத்தரின் தத்துவம் 7 படலத்தில்
30) சில புத்த சமய நூல்கள் யாது? மலிந்தபான்ஹா, லலிதவிஸ்தரா, வைபுல்ய சூத்திரங்கள், நேத்திபிரகர்ணம், பேதக உபதேசம்
31) தமிழகத்தில் பௌத்தம் பரவியிருந்ததை எந்த நூல் மூலம் அறியலாம்? மணிமேகலை
32) சமண நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? ஆகம சித்தாந்தங்கள்
33) சமண சமய பிரிவு – சுவேதம்பரர், திகம்பர்
34) சமணத்தை பற்றிக் கூறும் தமிழ் நூல்கள் சில? சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி

TNPSC MATERIAL KRISHOBA

35) சங்க கால இலக்கியங்கள் யாவை? பத்துப்பாட்டு, எட்டுத்தொகை

36) புறநானூறு வாயிலாக அறியப்படும் செய்திகள்

10 வகை ஆடைகள், 28 வகை அணிகலன்கள், 67 வகை உணவுகள் பற்றிய குறிப்புகள்

கடையேழு வள்ளல்களின் கொடைத்திறம், பாணர், விறலியர், கூத்தர் போன்றோரின் கலைத்திறம்

பாரதப்போரின்போது, உதியன் சேரலாதன் என்னும் மன்னன், வீரர்களுக்கு உணவு கொடுத்தமை

இறந்தவரைத் தாழியில் வைத்துப் புதைத்தல், நடுகல், கணவர் இறப்பிற்குப் பின், மங்கையர் அணிகலன்களைக் களைதல், கைம்மை நோன்பு நோற்றமை, உடன்கட்டை ஏறல்.

37) அகநானூறு வாயிலாக – தமிழரின் திருமண முறை

38) புறநானூறு – யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுவுடைமை

39) ஐங்குறுநூறு – அன்பின் சிறப்பை

40) நற்றிணை – விருந்தோம்பல், பெரியோரை மதித்தல், வறுமையில் செம்மை

41) கலித்தொகை – மார்கழி நோன்பு

42) நாட்டுப்புற இலக்கியங்கள் பற்றி சக்திவேல்

TNPSC MATERIAL

எடுத்தியம்புகின்றன. 'இலக்கியங்கள், காலங்காட்டும் கண்ணாடிகளாக விளங்க, நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாய வளர்ச்சியைக்காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன' என்று, பேராசிரியர் சு. சக்திவேல் தமது 'நாட்டுப்புற இயல் ஆய்வு' என்னும் நூலில் கூறுகிறார்.

43) வில்லியம் ஜான் தாமஸ்

நாட்டுப்புறவியலைக் குறிக்கும் Folklore என்ற சொல்லை, 1846இல் வில்லியம் ஜான் தாமசு என்பவர் உருவாக்கினார். 'பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural Survival) நாட்டுப்புறவியல்' என்பது அவரது கருத்தாகும்.

44) தொல்காப்பியர் பாமரர் பாடல்களை எவ்வாறு குறிப்பிடுகிறார்?
   பண்ணத்தி (நாட்டுப்புற பாடல்கள்)

45) பண்ணத்தி – பண் + நத்தி = பண்ணை விரும்புவது என பொருள்

46) நாட்டுப்புற பாடல்கள் எதை விளக்குகின்றன? அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளை

47) நாட்டுப்புற கதைகள் பற்றி தொல்காப்பியம் கூறும் வரி யாது? பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும் பொருளோடு புணர்ந்த நகை மொழி யானும் – என்ற வரி

48) சில நாட்டுப்புற கதைகள்

TNPSC MATERIAL KRISHOBA

விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், மரியாதை ராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், புத்தர் ஜாதகக் கதைகள், அக்பர் பீர்பால் கதைகள், மதன காமராசன் கதைகள், தமிழக நாட்டுப்புறக் கதைகள் போன்றவை சில நாட்டுப்புறக் கதைகளாகும்.

49) காப்பியங்கள் தோன்ற முதல் காரணம் என்ன? கதைப் பாடல்கள்

50) கதைப்பாடல்கள் – துணுக்குகள், கிராம தேவைகளின் கதைகள், சமூகக் கதைகள், வரலாற்றுக் கதைகள்

51) அம்மானை என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது? சிலப்பதிகாரம்

52) கதைப்பாடலின் நான்கு பகுதி – இறைவனை வழிபட்டு தொடங்குவது (காப்பு), குரு வணக்கம், நடந்த கதை (வரலாறு), அனைவரும் அருள் பெற்று வாழ (வாழி)

53) கதைப்பாடல்கள்

முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராயன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு பாடல், பஞ்சபாண்டவர் வனவாசம், கான்சாகிபு சண்டை, சுடலைமாடன் கதை, வில்லுப்பாட்டு போன்றவை சில வரலாற்றுக் கதைப்பாடல்களாகும்.

54) தொன்மைக் காலத்தில் மக்களை நன்னெறியில் வாழ வைக்க அமைந்தவை யாவை? பழமொழிகள்

55) சில பழமொழிகள்

TNPSC MATERIAL KRISHOBA

அறுசுவை உணவை மிஞ்சும்' என்ற பழமொழி விளக்குகிறது. 'கெடுவான் கேடு நினைப்பான்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' போன்ற பழமொழிகள் நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழவேண்டியதன் தேவையை எடுத்துரைக்கின்றன.

56) பொன் மொழி – சிறந்த கருத்தைச் சொல்வது, பழமொழி – உயர்ந்த பண்பாட்டை வலியுறுத்துவது

57) பண்டைய தொல்கதை – புராணங்கள்

58) சில புராணங்கள்

கொண்டவையே. வாயு புராணம், விஷ்ணு புராணம், மச்ச புராணம், பிரம்ம புராணம், பவிஷிய புராணம் முதலியன அவற்றுள்

மகாபுராணம், கந்தபுராணம், விநாயகப் புராணம், பாகவதம் போன்றவை புராணக்

59) புராணக்கதைகள் குறித்து சில அறிஞர்கள்

புராணக் கதைகள் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் வரையறை தந்துள்ளனர். ஈ. பி. டெய்லர் என்பார். 'புராணக் கதைகள், தங்களை உருவாக்கிய மக்களைப் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது' என்று கூறியுள்ளார். மாக்ஸ்முல்லர் என்ற அறிஞர், 'ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது' என்று குறிப்பிடுகிறார்.

TNPSC MATERIAL

60) இந்தியப் பண்பாட்டின் இயல்புகள் – நிலைத்த தன்மை, நெகிழுந்தன்மை, நடைமுறை வாழ்விற்கு பயன்படுதல், முழுவளர்ச்சிக்கு உதுவுதல், அனுபவ அறிவு

61) இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர் எது? ஆன்மிகம்

62) ஒன்றே குலம் ஒருவனே தேவன் – திருமூலர்

63) உலகில் சிறந்த பண்பாட்டுக் கூறுகளை கொண்டதாக கூறும் நாடுகள் யாவை? கிரேக்கம், ரோம், பாபிலோன், எகிப்து, பாரசீகம்

64) இந்தியப் பண்பாட்டிற்கு மேலும் சிறப்பைத் தருவது எது? மனிதநேயம்

65) மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும் – ரிக் வேதம் கூறுகிறது

66) யாதும் ஊரே யாவரும் கேளிர் – கணியன் பூங்குன்றனார்

67) நாகரிகம் என்ற சொல் – நகர் என்னும் சொல்லடியாகப் பிறந்தது

68) நகர் + அகம் – நகரம் – நகரிகம் – நாகரிகம்

69) நாகரிகம் – புற வளர்ச்சி,பண்பாடு – அகவளர்ச்சி

TNPSC MATERIAL KRISHOBA

# BEGINNERS BATCH-2021

**SCHEDULE-18-LESSON-2**

## 12TH-ETHICS-வேற்றுமையில் ஒற்றுமை

## IMPORTANT POINTS ONE LINER

1) மக்களாட்சி நாடாக இந்திய விளங்கக் காரணம் என்ன? வேற்றுமையில் ஒற்றுமை
2) அதிசயம் அதுதான் இந்தியா என்ற நூலை இயற்றியவர் யார்? AL பாஷம்
3) கங்கை நதி எந்த ஆண்டு தேசிய நதியாக அறிவிக்கப்பட்டது? 2008
4) இந்திய பண்பாட்டின் தனிச்சிறப்பு – வேற்றுமையில் ஒற்றுமை
5) இந்தியா – தீபகற்ப நாடு – துணைக்கண்டம்
6) ஆசியாவின் இத்தாலி எது? இந்தியா
7) அபினைன் மலைத்தொடர் எங்கு உள்ளது? இத்தாலி
8) இத்தாலியின் தெற்கே எந்த தீவு உள்ளது? சிசிலித் தீவு
9) இந்தியாவில் பயிர்கள்

சீராகவே உள்ளது. கேரள நிலப்பகுதியில் மிளகு உள்ளிட்ட பிற வாசனைத் பொருள்களும், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற நிலப்பகுதியில் நெல்லும், குஜராத், மகாராஷ்டிரா பகுதியில் பருத்தியும், பஞ்சாபில் கோதுமையும், மத்தியபிரதேசத்தில் பருப்பு வகைகளும், அஸ்ஸாமில் தேயிலையும், கர்நாடகாவில் காப்பியும் அதிகமாகப்

10) மழை குறைந்த உயர்நிலங்கள் – பீடபூமிகள்
11) சோட்டா நாக்பூர் பீடபூமி – கனிமங்கள், மாளவ பீடபூமியில் – திணை, தக்காணபீடபூமியில் – பருப்பு, எண்ணெய் வித்துக்கள்
12) வரலாற்றின் தந்தை யார்? ஹெரோடோட்டஸ்

TNPSC MATERIAL KRISHOBA

13) இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் – பாரசீகர்கள், கிரேக்கர்கள், சாகர்கள், ஹூணர்கள், குஷானர்கள்

14) இடைக்கால இந்தியாவில் – அரேபியர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள், முகலாயர்கள்

15) நவீன கால இந்திய வரலாற்றில் – போர்சுக்கீசியர், ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

16) இந்தியாவை இனங்களின் அருங்காட்சியகம் என்றவர் யார்? வின்செண்ட் ஆர்தர் ஸ்மித்

17) இந்திய இனங்கள்

1. காஷ்மீர், பஞ்சாப், இராஜபுதனம் ஆகிய பகுதியில் உள்ளவை. இந்தோ – ஆரிய இனம்.
2. தமிழகம், ஆந்திரம், மைய மாநிலங்கள், சோட்டா நாக்பூர் பகுதிகளிலும் வாழும் திராவிட இனம்.
3. அஸ்ஸாம் நேபாள எல்லையில் வாழும் மங்கோலிய இனம்.

4. ஐக்கிய மாநிலங்கள், பீகார் பகுதிகளில் வாழும் ஆரிய–திராவிட இனம்
5. வங்காளம், ஒட்டரதேசம் (ஒடிசா) பகுதியில் வாழும் மங்கோல் – திராவிட இனம்.
6. மராட்டியப் பகுதியில் வாழும் மக்கள் சிந்திய – வடமேற்கு எல்லைபுறத்தில் வாழும் துருக்கிய – இரானிய இனம்

TNPSC MATERIAL

18) அபெர் குரோம்பி – language is the vehicle of communication என்று குறிப்பிட்டார்
19) 780 க்கு மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகிறது
20) 1961 ல் தோராயமாக 1650 மொழிகள் பேசப்பட்டு வந்துள்ளன
21) வட இந்திய மொழிகளின் தாய் எது? சமஸ்கிருதம் (தேவ நாகரி எழுத்து வடிவம் வடமொழிகளை எழுத)
22) யார் பேசும் மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை? பழங்குடி
23) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் – 22
24) 22 மொழிகள்

இந்திய அரசியலமைப்பில் 22 மொழிகள் அட்டவணை மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை 1. அஸ்ஸாமி 2. பெங்காலி 3. போடோ 4. டோக்ரி 5. குஜராத்தி 6. இந்தி 7. கன்னடம் 8. காஷ்மீரி 9. கொங்கணி 10. மைதிலி 11. மலையாளம் 12. மணிப்பூரி 13. மராத்தி 14. நேபாளி 15. ஒரியா 16. பஞ்சாபி 17. சமஸ்கிருதம் 18. சாந்தலி 19. சிந்தி 20. தமிழ் 21. தெலுங்கு 22. உருது ஆகியவையாகும். இம்மொழிகளில் தமிழ்மொழியே மிகவும் பழைமையானதாகும்.

25) இந்தியாவில் தோன்றிய சமயங்கள் யாவை? இந்து, பௌத்த, சமண மற்றும் சீக்கிய
26) இந்தியாவை கிரேக்கர்கள் சிந்து என அழைத்தனர்
27) சிந்து – ஹிந்து – அரேபியர்கள் – ஹிந்துஸ்தானம் அழைப்பு
28) Discovery of India என்ற நூலை எழுதியவர் யார்? நேரு
29) இந்தியாவில் அறுவடைத் திருவிழாக்கள்

TNPSC MATERIAL

தமிழகத்தில் பொங்கல் விழா அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுவது போன்று கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தியாகவும், கேரளாவில் ஓணம் பண்டிகை, மத்திய பிரதேசத்தில் லொஹறி, பஞ்சாபில் பைசாகி, அசாமில் போஹாலி பிஹு, வங்காளத்தில் நபன்னா என்று பல்வேறு பெயர்களிலும் அறுவடை திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

30) ஸ்தூபி கட்டடமைப்பு – வட இந்தியாவில்

31) லிட்டன் பிரபு – the secret way – தமிழில் மனோன்மணியம் சுந்தரனார் – ரகசிய வழி

32) திராவிட மொழிக் குடும்பம்

திராவிட மொழிக் குடும்பம்

| தென்திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா. | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா. | குரூக், மால்தோ, பிராகுய். |

TNPSC MATERIAL KRISHOBA

33) ராமாயணம் இந்தியில் யாரால் எழுதப்பட்டது? துளசிதாசர்

TNPSC MATERIAL
KRISHOBA

KRISHOBA ACADEMY

# BEGINNERS BATCH-2021

SCHEDULE-18-
LESSON-3

## 12TH-ETHICS- பக்தி இயக்கம்

## IMPORTANT POINTS ONE LINER

1) பல நெறிகள் யாவை? பக்தி நெறி, கரும நெறி, ஞான நெறி, யோக நெறி
2) பக்தி என்ற சொல் எந்த சொல்லில் இருந்து தோன்றியது? பஜ் (வழிபாடு என்று பொருள்)
3) பக்தியின் வகைகள் யாவை?

பக்தி இருவகைப்படும் அவை 1) அபரபக்தி 2) பரபக்தி என்பதாகும்.

4) அபரபக்தி என்றால் என்ன?

அபரபக்தி:- பக்தன் தெளிவில்லாமல் குறுகிய சிந்தனையுடன் குறிப்பிட்ட ஒரு கடவுளை மட்டுமே வழிபாடு செய்வது அபரபக்தி ஆகும். தன் சுயநலத்தையோ,

5) பரபக்தி என்றால் என்ன?

பரபக்தி:- இந்நிலையில் பக்தன் அனைத்துத் தெய்வங்களையும் வழிபடுவதுடன் பக்தியின் உயர்ந்த நிலையில் செயல்படுகிறான். உலகம் தழுவிய அன்பு நெறியே பரபக்தியாகும்.

6) பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள் யாவை?

TNPSC MATERIAL

7) சைவ சமயம் – நாயன்மார்கள்
8) நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? 63 பேர்
9) சைவசமயக் குரவர்கள் யாவர்? திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்
10) நாயன்மார்களின் பாடல்களைத் தொகுத்தவர் யார்? நம்பியாண்டார் நம்பி
11) 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக் கூறியவர் யார்? சேக்கிழார் – பெரியபுராணம்
12) பெரியபுராணத்தின் மற்றொரு பெயர் என்ன? திருத்தொண்டர் புராணம்
13) பன்னிரு திருமுறைகள்

திருஞான சம்பந்தர் – 1, 2,3 திருமுறைகள் (திருக்கடைக்காப்பு)
திருநாவுக்கரசர் – 4,5,6 திருமுறைகள்
சுந்தரர் – 7-ஆம் திருமுறை
} தேவாரம்

மாணிக்கவாசகர் – 8-ஆம் திருமுறை – திருவாசகம்

திருமாளிகைத்தேவர், சேந்தனார் மற்றும் அருளாளர்கள் பாடல்கள். – 9-ஆம் திருமுறை – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

திருமூலர் – 10-ஆம் திருமுறை – திருமந்திரம்

திருவாலவாயுடையார், பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், நம்பியாண்டார் நம்பி பாடல்கள் – 11-ஆம் திருமுறை – தோத்திரப் பாடல்கள்

சேக்கிழார் – 12-ஆம் திருமுறை – பெரியபுராணம்.

TNPSC MATERIAL KRISHOBA

14) அன்னை உமாதேவியால் ஞானப்பால் ஊட்டப்பட்டவர் யார்?
திருஞானசம்பந்தர்

15) திருஞானசம்பந்தர் எங்கு பிறந்தார்? சிவபாத இருதயர் என்பவரின் மகனாக சீர்காழியில் பிறந்தார்

16) வேதங்களின் சாரங்களை தமிழுக்கு கொண்டு வந்ததில் முக்கிய பங்காற்றியவர் யார்? திருஞானசம்பந்தர்

17) திருஞானசம்பந்தரின் பக்தி நெறி – ஞானமார்க்கம்

18) மருள் நீக்கியார் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்? திருநாவுக்கரசர்

19) திருநாவுக்கரசரின் பெற்றோர் மற்றும் ஊர் யாது? திருமுனைபாடியில் உள்ள திருவாமூர் – புகழனார் – மாதினியார்

20) திருநாவுக்கரசர் அப்பர் என யாரால் அழைக்கப்பட்டார்? சம்பந்தர்

21) தருமசேனர் என்று எப்போது திருநாவுக்கரசர் அழைக்கப்பட்டார்? சமண சமயம் தழுவிய போது

22) திருநாவுக்கரசரின் தமக்கை யார்? திலகவதி

23) திருநாவுக்கரசர் யாரால் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறினார்? தம் தமக்கை திலகவதியால்

24) திருநாவுக்கரசருக்கு ஆட்கொண்ட நோய் எது? சூலை நோய்

25) திருநாவுக்கரசர் எந்த மன்னனை சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாற்றினார்? முதலாம் மகேந்திர வர்மன்

26) திருநாவுக்கரசரின் அற்புதங்கள்

திருத்தூங்கானை மாடத்தில் தமது தோளில் ரிஷப, சூல முத்திரைகளைப் பொறித்தார்.

அப்பூதி அடிகளாரின் மகனைப் பாம்பு தீண்ட, சிவனருளால் திருநாவுக்கரசர் அவ்விஷத்தை நீக்கி அருளினார்.

திருவையாற்றில் சிவபெருமானின் கைலாயக் காட்சியைக் கண்டுகளித்தார்.

27) திருநாவுக்கரசரின் பக்தி நெறி எது? தொண்டு நெறி

28) திருநாவுக்கரசர் சிவ ஆலயங்களை தூய்மை படுத்த எந்த குழுவை ஏற்படுத்தினார்? உழவாரப்படை

TNPSC MATERIAL KRISHOBA

29) என் கடன் பணி செய்து கிடப்பதே என்றவர் யார்? திருநாவுக்கரசர்

30) திருநாவுக்கரசர் எங்கு சைவ மடத்தை நிறுவினார்? திருப்பூந்துருத்தி

31) வடம்

> ங்களுக்குத் தரியுமா?
>
> வடம் என்ற சொல்லிற்கு ஆலமரத்தடி என்று பொருள். கோயிலின் ஆலமரத்தடியில் ஓம் என்ற பிரணவ மந்திரத்துடன் நடைபெறும் பூசையே வடதளிபூசை என்பார் உ.வே. சாமிநாதர்.

32) தாண்டகவேந்தர் என அழைக்கப்பட்டவர் யார்? திருநாவுக்கரசர்

33) திருநாவுக்கரசர் எங்கு முக்தி அடைந்தார்? திருப்புகலூர், நாகபட்டினம்

34) நாமார்க்கும் குடியல்லோம் – என்ற வரியை பாடியவர் யார்? திருநாவுக்கரசர்

35) சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் தான் தலை வணங்குவதில்லை என்றவர் யார்? திருநாவுக்கரசர்

36) சுந்தரின் பக்தி மார்க்கம் எது? சகமார்க்கம் என்ற நட்பு மார்க்கம்

37) சுந்தரரின் பெற்றோர் யாவர்? சடையனார் – இசைஞானியார்

38) தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்டவர் யார்? சுந்தரர்

39) சுந்தரர் பாடிய திருமுறை எத்தனையாவது? 7 ம் திருமுறை

40) திருத்தொண்டத் தொகையை இயற்றியவர் யார்? சுந்தரர் (திருத்தொண்டத்தொகை – 60 தனியடியார், 9 தொகையடியார்கள் பற்றி)

41) சுந்தரரின் அற்புதங்கள்

> நாகப்பட்டினம் அருகே திருக்குண்டையூரில் இவர் நெல்மலை பெற்றார்.

42) மாணிக்கவாசகர் எங்கு பிறந்தார்? திருவாதவூர்

43) மாணிக்கவாசகர் யாரிடம் அமைச்சராக இருந்தார்? வரகுணபாண்டியன்

44) மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் யாவை? திருவாசகம், திருக்கோவை

45) மாணிக்கவாசகர் எங்கு திருவருள் பெற்றார்? திருப்பெருந்துறை

TNPSC MATERIAL KRISHOBA

46) மாணிக்கவாசகரின் பக்தி மார்க்கம் என்ன? சிவபெருமானே முதன்மை கடவுள்
47) தில்லையில் வாழந்தவர் யார்? திருநீலகண்டர்
48) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்? ஜியூ போப்
49) திருவாசகம் நூல் அமைப்பு யாது? 51 திருப்பதிகங்கள், 656 பாடல்கள்
50) திருவாசக நான்கு பகுதிகள் யாவை? சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவண்டபப்பத்தி, போற்றித் திரு அகவல்
51) சிவனடியார் போன்று மாறுவேடம் பூண்ட முத்தநாதனிடம் உபதேசம் பெறக் காத்திருந்தவர் யார்? மெய்ப்பொருள் நாயனார்
52) தன்னைத் தாக்கிய முத்தநாதனை தொழுது நின்றவர் யார்? மெய்ப்பொருள்நாயனார்
53) அதிபக்தர் என்ற சொல்லிற்கு பொருள் என்ன? சிறந்த பக்தர்
54) தாம் பிடித்த மீன்களில் ஒன்றை சிவபெருமானுக்கு படைப்பவர் யார்? அதிபத்தநாயனார்
55) அதிபத்தர் இறைவனுக்கு தங்க மீனை அர்ப்பணிக்கும் விழா எங்கு நடைபெறுகிறது? நாகபட்டினம், காயாரோகணசுவாமி கோவில் ஆவணி மாதம்
56) திண்ணன் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்? கண்ணப்ப நாயனார்
57) தன் இரு கண்ணையும் பிடுங்கி சிவனுக்கு பொருத்தியவர் யார்? கண்ணப்ப நாயனார்
58) புனிதவதி என்ற இயற்பெயர் கொண்டவர் யார்? காரைக்கால் அம்மையார்
59) தமிழுக்கு அந்தாதி என்ற இலக்கிய முறையை அறிமுகம் செய்தவர் யார்? காரைக்கால் அம்மையார்
60) காரைக்கால் அம்மையார் இயற்றிய நூல்கள் யாவை? அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை
61) மாங்கனித் திருவிழா எங்கு கொண்டாடப்படுகிறது? காரைக்கால்
62) திருஞானசம்பந்தரை திருமறைக்காட்டில் இருந்து பாண்டிய அரசவைக்கு அழைத்த பெருமை யாரைச் சாரும்? மங்கையர்க்கரசியார்
63) சுந்தரரின் தாயார் யார்? இசைஞானியார் (சிவ அருள் பெற்ற பெண்மணி)

TNPSC MATERIAL KRISHOBA

64) சந்தானாச்சாரியர்கள் யாவர்? நான்கு பேர்

மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும்

65) சந்தானம் (வம்சாவழி, பரம்பரை) – அகச் சந்தானம், புறச் சந்தானம்

66) அகச் சந்தானம் – கயிலை மலையில் வாழ்வோர் – நந்தி தேவர், சனற்குமார், சத்தியஞான தரிசனங்கள், பரஞ்சோதியார்

67) புறச்சந்தானம்

பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்டதேவரும், மெய்கண்டதேவரிடம் அருணந்தி சிவமும், அருணந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தரும் ஆன்மிக அறிவு பெற்றனர். மெய்கண்ட தேவர் சிவஞானபோதம் என்ற நூலையும், அருணந்தி சிவாச்சியாரியார் சிவஞான சித்தியார், இருபா இருஃபது ஆகிய நூல்களையும், உமாபதிசிவம் சிவப்பிரகாசம் முதலிய 'சித்தாந்த அஷ்டகம்' என்ற எட்டு நூல்களையும் எழுதினர்.

68) கர்நாடகாவில் லிங்காயத் என்ற புதிய சமய பிரிவைத் தோற்றுவித்தவர் யார்? பசவர்

69) ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர்? 12 பேர்

70) திராவிட வேதம் – நாலாயிரத்திவ்விய பிரபந்தம்

71) ஆழ்வார்கள் – திராவிட ஆச்சாரியர்கள் எனவும் போற்றப்பட்டனர்

72) ஆழ்வார்கள் 3 நிலை

முற்காலத்தவர்கள் 2) இடைக்காலத்தவர்கள் 3) பிற்காலத்தவர்கள் என்று மூன்று நிலைகளில்

TNPSC MATERIAL

> இடைக்காலத்தவர்கள் – நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இடைக்காலத்தவராவர்.

73) பொய்கையாழ்வார் எங்கு பிறந்தார்? காஞ்சிபுரம், திருவெஃகா என்ற ஊரில் யதோத்தகாரி என்ற பெருமாள் கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில்

74) பொய்கையார் என்று அழைக்கப்பட்டவர் யார்? பொய்கையாழ்வார்

75) பொய்கையாழ்வார் எவற்றின் அம்சமாக அவதரித்தார்? திருமாலின் கையில் உள்ள பஞ்சசன்யம் என்ற திருச்சங்கின் அவதாரம்

76) முதல் திருவந்தாதி யாரால் பாடப்பெற்றது? பொய்கையாழ்வார்

77) மங்களாசாசனம்

> உங்களுக்குத் தெரியுமா?
>
> மங்களாசாசனம் என்பது வைணவத் திருத்தலங்களில் பக்திப் பாடல்களை இயற்றி அங்கேயே இறைவன் முன் அரங்கேற்றுவதாகும். தமிழகத்தில் மங்களாசாசனம் செய்தவர்களில் பொய்கையாழ்வாரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

78) பன்னிரு ஆழ்வார்களில் முதன்மையானவர் யார்? பொய்கையாழ்வார்

79) இரண்டாவது திருவந்தாதி யாரால் பாடப்பட்டது? பூதத்தாழ்வார்

80) பூதத்தாழ்வார் எங்கு அவதரித்தார்? மாமல்லபுரத்தில் குருக்கத்தி மலரில்

81) பூதத்தாழ்வாரின் 2 கண்கள் யாவை? திருமாலின் மீதான பக்தி, தமிழின் மீதான பக்தி

82) பூதத்தாழ்வார் எவற்றின் அம்சமாக அவதரித்தார்? திருமாலின் கையில் உள்ள கௌமோதகி (ஆயுதம்) அம்சமாக அவதரித்தார்

83) அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக என்ற வரியை பாடியவர் யார்? பூதத்தாழ்வார்

84) பேயாழ்வார் பிறந்த இடம் எது? சென்னையில் உள்ள மயிலாப்பூர்

TNPSC MATERIAL

85) பேயாழ்வார் எவற்றின் அம்சமாக அவதரித்தார்? திருமாலின் 5 ஆயுதங்களில் ஒன்றான நாந்தகம் என்ற வாளின் அம்சமாக
86) பேயாழ்வார் பாடிய திருவந்தாதி எது? மூன்றாவது திருவந்தாதி
87) திருமழிசையாழ்வார் எங்கு தோன்றினார்? தொண்டைநாட்டில் திருமழிசை
88) திருமழிசையாழ்வார் எவற்றின் அம்சமாக அவதரித்தார்? திருமாலின் சுதர்சன சக்கரத்தின் அம்சமாக
89) திருமழிசையாழ்வார் எங்கு திருமாலை தரிசித்தார்? திருவெஃகா
90) திருமழிசையாழ்வாரின் மற்ற பெயர்கள் யாவை? பக்திசாரர், திருமழிசைபிரான், குடமுக்கிற்புலவர்
91) திருமழிசையாழ்வார் அருளிய நூல்கள் யாவை? நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்
92) நம்மாழ்வார் எங்கு தோன்றினார்? பாண்டிய நாட்டில் ஆழ்வார் திருநகரி
93) தமிழ் செய்த மாறன் என்று அழைக்கப்படுபவர் யார்? நம்மாழ்வார்
94) நம்மாழ்வார் இயற்றிய நூல்கள் யாவை? திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி
95) நம்மாழ்வாரின் இயற்பெயர்கள் யாவை? சடகோபன், குடிபெயர்மாறன்
96) நம்மாழ்வாரின் சிறப்பு பெயர்கள் யாவை? குருகூர் நம்பி, வகுளாபரணன், பராங்குசன், காரிமாறன், வழுதிவளநாடான்
97) மதுரகவியாழ்வார் எங்கு பிறந்தார்? பாண்டிய நாட்டில் திருக்கோளூர்
98) மதுரகவியாழ்வார் யாரை குருவாக ஏற்றுக்கொண்டார்? நம்மாழ்வார்
99) இறவனைப் பாடாமல் தன் குருவைப் பாடியவர் யார்? மதுரகவியாழ்வார்
100) கண்ணிநுண் சிறுதாம்பு என்ற பாசுரத்தைப் பாடியவர் யார்? மதுரகவியாழ்வார்
101) குலசேகர ஆழ்வார் எங்கு பிறந்தார்? சேர நாட்டில் திருவஞ்சைக்களம்
102) குலசேகர ஆழ்வார் இயற்றிய பாசுரம் எது? பெருமாள் திருமொழி (இறைவனை குழந்தையாக பாவித்து)
103) அரச வம்சத்தில் பிறந்தவர் யார்? குலசேகர ஆழ்வார்
104) நாடாளும் மன்னனாக இருப்பதை விட திருவேங்கடச் சுனையில் மீனாக இருத்தலே மேல் என்றவர் யார்? குலசேகர ஆழ்வார்
105) திருமால் கோயில்களில் உள்ள கருவறையின் படி எவ்வாறு அழைக்கப்படுகிறது? குலசேகரப்படி

TNPSC MATERIAL KRISHOBA

106) பெரியாழ்வார் எங்கு பிறந்தார்? திருவில்லிபுத்தூர்

107) பெரியாழ்வாரின் மற்ற பெயர்கள் யாவை? விஷ்ணுசித்தன், பட்டர் பிரான்

108) பிற்கால பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றக் காரணமானவை? பெரியாழ்வார் திருமாலை தமது குழந்தையாக கருதி பாடியது

109) பெரியாழ்வார் இயற்றியவை யாவை? திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

110) பெரியாழ்வார் தன் நந்தவனத்தில் துளசி செடி அருகே கண்டு எடுத்த குழந்தை யார்? ஆண்டாள்

111) ஆண்டாளிற்கு பெரியாழ்வார் சூட்டிய பெயர் என்ன? கோதை நாச்சியார்

112) சூடிகொடுத்த சுடர் கொடி என அழைக்கப்பட்டவர் யார்? ஆண்டாள்

113) ஆண்டாள் இயற்றியவை யாவை? திருப்பாவை, நாச்சியார் திருமொழி

114) பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நூல் எது? திருப்பாவை

115) தொண்டரடிப்பொடியாழ்வார் எங்கு பிறந்தார்? திருமண்டங்குடி, கும்பகோணம்

116) தொண்டரடிப்பொடியாழ்வாரின் இயற்பெயர் என்ன? விப்ரநாராயணர்

117) தொண்டரடிப்பொடியாழ்வார் எங்கு நந்தவனம் அமைத்து இறைவனுக்கு தொண்டு செய்து வந்தார்? திருவரங்கம்

118) தமக்கு கடவுளைத் தவிர வேறு துணையில்லை என்றவர் யார்? தொண்டரடிப்பொடியாழ்வார்

119) தொண்டரடிப்பொடியாழ்வார் இயற்றிய நூல்கள் யாவை? திருமாலை, திருப்பள்ளி எழுச்சி

120) திருப்பாணாழ்வார் எங்கு பிறந்தார்? உறையூர், திருச்சி

121) திருப்பாணாழ்வார் இயற்றியது? அமலனாதிபிரான் பாசுரங்கள்

122) திருமங்கையாழ்வார் எங்கு பிறந்தார்? திருவாலி திருநகரி , சோழநாடு

123) சோழ மன்னனின் படைத்தளபதியாக இருந்தவர் யார்? திருமங்கையாழ்வார்

124) பரகாலன் – எதிரிகளுக்கு எமன் என்ற பட்டம் பெற்றவர் யார்? திருமங்கையாழ்வார்

TNPSC MATERIAL KRISHOBA

125) சோழ மன்னன் திருமங்கையாழ்வாரை எந்த நாட்டிற்கு மன்னர் ஆக்கினார்? திருமங்கை – திருமங்கை மன்னன் என்ற பட்டம்

126) திருமங்கையாழ்வார் இயற்றியவை யாவை? பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்

127) வைணவ நடைமுறையும், தத்துவமும் தோன்ற காரணமாக இருந்தவர்கள் யாவர்? ஆச்சாரியர்கள்

128) மணிப்பிரவாளநடை

மணி என்பது முத்துமணி. பிரவாளம் என்பது பவளமணி. வெண்ணிற முத்துமணியையும், சிவந்த பவளமணியையும் சேர்த்து கோர்த்தார் போல் அமைந்தது மணிப்பிரவாளம். அதுபோல தமிழ்ச்சொற்களும் வடமொழிச் சொற்களும் கலந்து எழுதப்பட்ட உரைநடையே மணிப்பிரவாள நடை எனப்பட்டது.

129) நாதமுனிகள் எங்கு பிறந்தார்? காட்டுமன்னார்கோவில்

130) நாலாயிரத்திவ்வியபிரபந்தத்தை தொகுத்தவர் யார்? நாதமுனி

131) ஆழ்வார்களின் பிரபந்தங்களுக்கு இசை அமைத்தவர் யார்? நாதமுனி

132) நாதமுனி இயற்றிய நூல்கள் யாவை? நியாயத்தத்துவம், யோக ரகசியம்

133) இராமானுஜர் எங்கு பிறந்தார்? திருப்பெரும்புதூர்

134) இராமானுஜர் யாருடைய மாணவர்? ஆளவந்தார்

135) பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதியவர் யார்? இராமானுஜர்

136) இராமானுஜர் யார் துணை கொண்டு திருவாய் மொழிக்கு ஆறாயிரப் படி உரை எழுதினார்? திருக்குருகைபிரான் பிள்ளை

137) திருவெட்டழுத்தை அனைவரும் அறியும் படி உரக்க கூறியவர் யார்? இராமானுஜர்

138) இராமானுஜர் தோற்றுவித்த தத்துவம் எது? வசிஷ்டாத்வைதம்

139) இராமானுஜர் எழுதிய நூல்கள் யாவை? வேதாந்தசாரம், வேதாந்ததீபம், வேந்தாந்தசங்கிரகம், ஸ்ரீபாஸ்யம், ஸ்ரீகீதாபாஸ்யம், திருவரங்க கத்தியம், வைகுண்ட கத்தியம்

TNPSC MATERIAL KRISHOBA

140) யார் காலத்திற்குப் பின் வைணவம் பிரிந்தது? இராமானுஜர் காலம், வடகலை மற்றும் தென் கலை

141) ஆலய நுழைவு போராட்டத்தின் முன்னோடி யார்? இராமானுஜர்

142) ஆன்மாவே பரம்பொருளின் சாரம் என்று கூறியவர் யார்? இராமானுஜர்

143) இராமானுஜர் எந்தக் கோவிலில் கடைசி வரை இறைபணி செய்தார்? திருவரங்கம் கோவில்

144) நிம்பார்க்கர் கொள்கை என்ன? பேதாபேதம்

145) நிம்பார்க்கர் வழிபாடு என்ன? விஷ்ணுவின் அவதாரமான ராதா கிருஷ்ணன் வழிபாடு (உத்திரப்பிரதேசம் சிலர் பின்பற்றினர்)

146) மத்துவர் எங்கு பிறந்தார்? கர்நாடகம், உடுப்பி, கல்யான்பூர் என்ற இடம்

147) மத்துவரின் பக்தி கோட்பாட்டின் ஆதராம் என்ன? லக்ஷ்மி மற்றும் மகாவிஷ்ணு அவதாரம்

148) மத்துவரின் பக்தி கோட்பாடு என்ன? துவைதம் (இருமைக் கொள்கை)

149) மத்துவரின் கோட்பாடுகள் என்ன தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன? சர்வமூலம் (37 நூல்களை மத்துவர் எழுதியுள்ளார்)

150) மத்துவரின் சீடர் யார்? ஜெயதீர்த்தர்

151) ஜெயதீர்த்தர் எழுதிய நூல்? வதவாலி (மத்துவரின் நூல்களுக்கு விளக்கவுரை ‘பாஷ்யம்’ எழுதியுள்ளார்

152) நியாயசுதா என்ற நூலை எழுதியவர் யார்? ஜெயதீர்த்தர்

153) நியாயசுதா என்ற நூலிற்கு விளக்கவுரை எழுதியவர் யார்? ராகவேந்திரர்

154) ராமானந்தர் எங்கு பிறந்தார்? அலகாபாத்

155) ராமானந்தர் யாரை குருவாக ஏற்றுக்கொண்டார்? இராமானுஜர்

156) வங்காளப் பகுதியில் சிவ வழிபாட்டை பரப்பியவர் யார்? வித்யாபதி

157) வித்யாபதி எழுதிய நூல் எது? புருஷபக்சா என்ற நீதி நூல்

158) வித்யாபதி இயற்றிய நாடக நூல் எது? மைதிலி மொழியில் கோரக்ச விஜயா

159) ஞானேஸ்வர் எந்த இடத்தில் பக்தியை பரப்பினார்? மஹாரஸ்டிரா

160) ஞானேஸ்வர் கோட்பாடுகள் - மஹாரஸ்டிரா தர்மம்

161) ஞானேஸ்வர் பகவத்கீதையின் விளக்கவுரையாக எந்த நூலை எழுதினார்? ஞானேஷ்வரி

162) ஞானேஸ்வர் எழுதிய மற்றொரு நூல் என்ன? அம்ருதானுபவ

TNPSC MATERIAL KRISHOBA

163) பசவர் எந்த மன்னிடம் அமைச்சராக பணியாற்றினார்? சாளுக்கிய மன்னன்

164) பசவரின் கோட்பாடு என்ன? சிவபெருமானே முழுமுதற்கடவுள்

165) பசவரை பின்பற்றியவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? வீரசைவர்கள் (லிங்காயத்துகள்)

166) பசவர் எந்த மொழியில் தன் போதனைகளைப் பரப்பினார்? கன்னடம்

167) நாமதேவர் எங்கு பிறந்தார்? மஹாராஷ்டிரா, பண்டரிபுரம்

168) நாமதேவர் எந்தக் கோட்பாட்டை பின்பற்றினார்? விதோபா

169) யாருடைய கருத்துக்கள் மகாராஷ்டிரா தங்கம் என அழைக்கப்பட்டது? நாமதேவர்

170) கபீர் யாருடைய சீடர்? ராமானந்தர்

171) அல்லாவும் ஈஸ்வரனும் ஒன்றே என்றவர் யார்? கபீர்

172) இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வித்திட்டவர் யார்? கபீர்

173) கபீர் உடைய பாடல்கள் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது? தோஹாக்கள்

174) குருநானக் எங்கு பிறந்தார்? தால்வண்டி

175) குருநானகின் குரு யார்? கபீர்

176) சீக்கிய சமயத்தை தோற்றுவித்தவர் யார்? குருநானக்

177) லங்கர் என்ற உணவுக் கூடத்தை நிறுவியவர் யார்? குருநானக்

178) குருநானக்கின் போதனைகள் அடங்கிய தொகுப்பின் பெயர் என்ன? ஆதிகிரந்தம் (சீக்கிய மதத்தின் புனித நூல்)

179) எத்தனை சீக்கிய குருமார்கள் குருநானக்கின் போதனைகளை உலகறியச் செய்தனர்? 9 பேர்

180) வல்லபாச்சாரியார் எங்கு பிறந்தார்? காசி

181) கிருஷ்ணதேவராயருக்கு கிருஷ்ண வழிபாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தவர் யார்? வல்லபாச்சாரியார்

182) வல்லபாச்சாரியார் உருவாக்கிய ஆன்மீக கோட்பாடு என்ன? புஷ்டிமார்க்கம்

183) வல்லபாச்சாரியார் எழுதிய நூல்கள் யாவை? சுபோதினி, சித்தாந்த ரகசியா

184) வல்லபாச்சாரியார் பாடல்கள் இன்றும் எங்கு பாடப்படுகிறது? ராஜஸ்தான், குஜராத்

TNPSC MATERIAL KRISHOBA

185) ஸ்ரீசைதன்ய மகாபிரபு என அழைக்கப்பட்டவர் யார்? சைதன்யர்

186) சைதன்யரின் தத்துவம் யாது? அசிந்திய பேதா பேதம்

187) கிருஷ்ணர் முன்பு அனைவரும் சமம் என்று கூறியவர் யார்? சைதன்யர்

188) கோஸ்வாமி துளசிதாஸ் என அழைக்கப்பட்டவர் யார்? துளசிதாசர்

189) இராமயணத்தை இந்தி மொழியில் மொழியாக்கம் செய்தவர் யார்? துளசிதாசர் – ராமசரித மானஸ் என்ற பெயரில்

190) துளசிதாசர் இயற்றிய நூல்கள் யாவை? வினயபத்திரிக்கா, கீதாவளி, தோகாவளி, பார்வதி மங்கள்,ஜானகி மங்கள் (கடமை பற்றி)

191) ஆக்ராவின் பார்வையற்ற கவிஞர் எனப்பட்டவர் யார்? சூர்தாசர்

192) சூர்தாசர் இயற்றிய நூல்கள் யாவை? சூர் சாகர், சாகித்ய ரத்னா

193) சூர்தாசர் எந்த மன்னனை புகழ்ந்து பாட மறுத்து விட்டார்? அக்பர்

194) சூர்தாசர் தோற்றுவித்த பக்திப்பிரிவு எது? ராதா வல்லபி

195) பக்தி நெறியை சுவையான பாடல்கள் மூலம் பரப்பியவர் யார்? மீரா பாய்

196) சத்ரபதி சிவாஜியின் ஆன்மீககுரு யார்? குரு ராம்தாசர்

197) குரு ராம்தாசர் இயற்றிய நூல் என்ன? தசபோதா

198) குரு ராம்தாசரின் குரு யார்? பகவான் ராம்

199) சஜ்ஜன்காட் (துறவிகளின் கோட்டை) என்ற பகுதியை உருவாக்கியவர் யார்? சத்ரபதி சிவாஜி

200) ஏக்நாதர் எங்கு பிறந்தார்? பைத்தான், மஹாரஸ்டிரா

201) விஷ்ணுவை விட்டலா என்ற பெயரில் வழிபட்டவர் யார்? துக்காராம்

202) துக்காராம் தன் ஆன்மீக கோட்பாட்டின் மையமாக எந்த இடத்தை தேர்வு செய்தார்? பந்தர்பூர்

203) துக்காராம் மராத்தி மொழியில் பாடிய பாடல் – அபங்கம்

204) சூபியிசம் – இஸ்லாமின் பக்தி பிரிவு

205) சூபி என்ற சொல் எந்த சொல்லில் இருந்து வந்தது? சஃபா என்ற சொல் (தூய என பொருள்)

206) புகழ் பெற்ற சூபி ஞானிகள்

TNPSC KRISHOBA MATERIAL

குவாஜா மொய்னுதீன் சிஸ்தி, ஷேக்ஃபரீத், ஷேக் நிசாமுதீன் அவுலியா ஆகியோர் புகழ்பெற்ற சூபி ஞானிகள் ஆவர்.

**207) அமீர்குஸ்ரு**

இந்துஸ்தானத்தின் பறவை எனப்பட்ட அமீர்குஸ்ரு சிறந்த கவிஞராகவும் சூபியிச ஞானியாகவும் திகழ்ந்தார். பாரசீக, பிரஜ் (Parji) மொழிகளில் இசைப்புலமை பெற்ற இவர் குவாலிஸ் என்ற இசை முறையை உருவாக்கிப் பயன்படுத்தினார். சிதார் என்ற இசைச் கருவியை உருவாக்கினார். சூபியிச வழிபாடு முறை மக்களிடையே பரவ, இசை முக்கியப் பங்காற்றியது.

**208) சிறப்பு மிக்க யோகா முறை எது? நாத யோகா (மந்திரங்கள் ஒலியாக எழுப்பி)**

TNPSC MATERIAL
KRISHOBA

KRISHOBA ACADEMY

# BEGINNERS BATCH-2021

SCHEDULE-18-
LESSON-4

## 12TH-ETHICS- சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள்

## IMPORTANT POINTS ONE LINER

1) சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்கள் யாவை? அரசியல் ஒற்றுமை, இந்தியச் செய்தித்தாள்கள், மேலைநாட்டுக் கல்வி, கிருத்துவ சமயபரப்புக் குழுக்களின் தாக்கம், அறிவியல் தொழில் நுட்பம், அயல்நாட்டவரின் பங்களிப்பு
2) வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் யார்? டல்ஹௌசி
3) சில இந்தியச் செய்தித்தாள்கள் யாவை? அமிர்தபஜார் பத்திரிக்கா, தி இந்து, சுதேசமித்திரன், இந்தியா, கேசரி, மராத்தா
4) எந்த ஆண்டு யாரால் ஆங்கிலம் இந்தியாவில் பயிற்று மொழியாக்கப்பட்டது? மெக்காலே, 1835
5) யார் அறிக்கையின் படி பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன? 1854, சார்லஸ் உட் அறிக்கையின்படி (கல்கத்தா, பம்பாய், சென்னை)
6) இந்தியாவின் கடந்த கால பண்பாடுகளை மறு உயிர்பிப்பு செய்தவர் யாவர்? மாக்ஸ்முல்லர் மற்றும் வில்லியம் ஜோன்ஸ்
7) ராஜாராம் மோகன் ராய் – 1772 முதல் 1833 வரை (வங்காளம்- பிறப்பு)
8) 19 ம் நூற்றாண்டின் சமூக சமய சீர்திருத்தவாதிகளில் முதன்மையானவர் யார்? ராஜாராம் மோகன் ராய்
9) உருவவழிபாடு மறைநூல்களில் உள்ள கருத்துக்கு எதிரானது என்று ராஜாராம் மோகன் ராய் கூறிய போது அவர் வயது என்ன? 15 வயது
10) ராஜாராம் மோகன் ராயின் நூல்கள் சில?? இயேசுவின் கொள்கைகள், அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் வழிகாட்டி
11) ராம் மோகன் ராய்க்கு “ராஜா” என்ற பட்டம் அளித்தவர் யார்? முகலாய அரசர் இரண்டாம் அக்பர் ஷா

TNPSC MATERIAL
KRISHOBA

12) ராஜாராம் மோகன் ராய் 1815 ல் கல்கத்தாவில் தோற்றுவித்த சபை எது? ஆத்மிய சபாவை

13) ஆத்மிய சபா – 1828 ல் – பிரம்ம சமாஜம் ஆனது “ஒரே கடவுள்”

14) பிரம்ம சமாஜத்தின் அடிப்படை தத்துவம் என்ன? தூய உள்ளமும் தூய வாழ்வும் உய்யும் வழி

15) ஒரே கடவுள் சங்கம் என்று அழைக்கபட்ட சங்கம் எது? பிரம்ம சமாஜம்

16) பிரம்ம சமாஜத்தின் உறுப்பினர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பிரமோக்கள்

17) ராஜாராம் மோகன் ராய் யாருடன் உதவியால் சதி என்னும் தடைச் சட்டம் நிறைவேற்றினார்? வில்லியம் பெண்டிங் பிரபு

18) சதி என்னும் தடைச் சட்டம் எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது? 1829 ம் ஆண்டு

19) வில்லியம் கேரி

நடைபெற்றன. வில்லியம் கேரி (William Carey) மற்றும் இராஜாராம்மோகன்ராய் முயற்சியினால் வங்காள மாகாணத்தில் கி.பி(பொ.ஆ.) 1829–ஆம் ஆண்டில் சதி ஒழிக்கப்பட்டது. கி.பி(பொ.ஆ.) 1861–இல் விக்டோரியா மகாராணி ஆட்சிக்காலத்தில் இந்தியா முழுவதும் இக்கொடிய சமூகப்பழக்கம் தடை செய்யப்பட்டது.

20) எந்த ஆண்டு வங்காளத்தில் பெண்சிசு கொலைக்கு தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது? 1795 ம் ஆண்டு (கர்னல் டாட், ராஜபுத்திரர்கள்)

21) எந்த ஆண்டு விதவை மறுமணச்சட்டம் கொண்டு வரப்பட்டது? 1856 ல் (ஈஸ்வர சந்திர வித்யாசாகர்)

22) விதவை திருமணத்தை விரிவுபடுத்த தீவிர இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்? ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

23) கேசவசந்திர சென் முயற்சியால் கொண்டுவரபட்டது என்ன? 1872 ல் சிறப்பு திருமணச் சட்டம் (குழந்தை திருமணம், பலதார மணம் தண்டனைக்குரிய குற்றம்)

24) 1901 பரோடா அரசு – குழந்தை திருமண தடைச் சட்டம்

TNPSC MATERIAL

25) 1930 ல் இந்திய அரசால் சாரதா சட்டம் – பெண்ணின் திருமண வயது 14

26) பூனாவில் விதவை பெண்கள் இல்லத்தை நிறுவியவர் யார்? பண்டிதகார்வே

27) ராஜாராம் மோகன்ராயை எவ்வாறு போற்றுகின்றனர்? இந்து சமயத்தை சீர்திருத்திய செம்மல், இந்திய மறுமலர்ச்சியின் தந்தை, இந்தியாவின் விடிவெள்ளி, இந்திய தேசத்தின் முன்னோடி, இந்தியாவின் புத்துலகச் சிற்பி

28) ராஜாராம் மோகன்ராயின் வாரப்பத்திரிக்கையின் பெயர் என்ன? சம்வாத்கௌமுகி, 1821 , வங்கமொழி வாரப்பத்திரிக்கை

29) ராஜாராம் மோகன்ராயின் பாராசீக பத்திரிக்கையின் பெயர் என்ன? மிராத் – உல் –அக்பர்

30) ராஜாராம் மோகன்ராய் எந்த ஆண்டு மறைந்தார்? 1833 செப்டம்பர் 27 பிரிஸ்டல் என்னுமிடத்தில் மறைந்தார்

31) ராஜாராம் மோகன்ராய் பற்றி சர்மோனியார் வில்லியம்

மறைந்தார். "இவர் உலகிலேயே நவீன முறையில் முதன்முதலாகச் சமயஒற்றுமை நோக்கு உணர்ச்சியினை உண்டாக்கப் பாடுபட்டார்" என்று வரலாற்றாசிரியர் சர்மோனியர் வில்லியம் குறிப்பிடுகிறார்.

32) ராஜாராம் மோகன்ராய் பற்றி சீர்

உலக மனிதாபிமானத்தை ஆன்மிகம், அரசியல் ஆகியவற்றுடன் இணைத்து "பரந்த மனித மதத்தைக் கண்டவர் இராஜராம்மோகன்ராய்" என்று வரலாற்றாசிரியர் சீல் குறிப்பிடுகிறார்.

33) ஆரியா என்பதன் பொருள் என்ன? கடவுளின் குழந்தை, அறிவார்ந்தோர் அமைப்பு

34) ஆரிய சாமஜம் யாரால் துவங்கப்பட்டது? 1875 ல் தயானந்தசரஸ்வதி (பம்பாய்)

TNPSC MATERIAL

35) தயானந்தசரஸ்வதி இயற்பெயர் என்ன? மூல்சங்கர்
36) தயானந்தசரஸ்வதி எங்கு எப்போது பிறந்தார்? கத்தியவாரில் உள்ள மூர்வி என்னுமிடத்தில், 1824 ல் பிறந்தார்
37) தயானந்தசரஸ்வதியின் குரு யார்? விரஜானந்தர்
38) பம்பாயில் இருந்து ஆரிய சமாஜத்தின் தலைமையிடம் எங்கு மாற்றப்பட்டது? லாகூர்
39) வேதங்களை நோக்கிச் செல் என்று கூறியவர் யார்? தயானந்தசரஸ்வதி
40) இந்தியா இந்தியருக்கே என்று கூறியவர் யார்? தயானந்தசரஸ்வதி
41) "மறை செழித்த நாடே எம்மகேஸ்வரன் வீடு என்று கூறியவர் யார்? தயானந்தசரஸ்வதி
42) சுத்தி இயக்கம் – தயானந்தசரஸ்வதி
43) தயானந்த ஆங்கிலோ வேதப்பள்ளி – DAV
44) லாகூரில் யார் தலைமையில் DAV பள்ளிகள் தொடங்கப்பட்டன? 1866 ல் ஹன்ஸ்ராஜ்
45) வாய்மையே வெல்லும் – தயானந்தரின் தாரக மந்திரம்
46) வாய்மையே வெல்லும் என்ற சொல் எதிலிருந்து எடுக்கப்பட்டது? முண்டக உபநிடதம்
47) இந்து சமயத்தின் மார்டின் லூதர் என அழைக்கப்பட்டவர் யார்? தயானந்த சரஸ்வதி
48) தயானந்த சரஸ்வதியை இந்திய மறுமலர்ச்சியின் தந்தை எனக் குறிப்பிட்டவர் யார்? இரவீந்தரநாத் தாகூர்
49) இராமகிருஷ்ண பரமஹம்சர் எங்கு பிறந்தார்? 1836 கல்கத்தா ஹூக்ளி நதிக்கரை கமர்புக்கூர் என்னுமிடம்
50) இராமகிருஷ்ண பரமஹம்சரின் இயற்பெயர் என்ன? கடாதரசட்டர்ஜி
51) இராமகிருஷ்ண பரமஹம்சர் எந்தக் கோவிலில் அச்சகராக பணி புரிந்தார்? தக்னேஷ்வர் (கோவில் ராணி ராஸ்மோனி என்பவரால் கட்டப்பட்டது)
52) இராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியின் பெயர் என்ன? சாரதாதேவி
53) இராமகிருஷ்ண பரமஹம்சர் பற்றி விவேகானந்தர் எவ்வாறு கூறுகிறார்? இறைவனும் மனிதனும் கலந்த வியத்தகு கலவை
54) விவேகானந்தரின் பெற்றோர் யாவர்? 1863 ல், கல்கத்தா, விஸ்வநாத் தத்தா – புவனேஸ்வரி

TNPSC MATERIAL
KRISHOBA

55) யோக நெறிகள் என்ற நூலை எழுதியவர் யார்? விவேகானந்தர்

56) விவேகானந்தரின் இயற்பெயர் என்ன? நரேந்திரநாத்

57) யோகநெறி நூல்

உங்களுக்குத் தெரியுமா?

இராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் போன்றவற்றின் மூலம் மோட்சத்தை அடையலாம் என்று தமது யோகநெறிகள் என்ற நூலில் விவேகானந்தர் கூறியுள்ளார்.

58) இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர் யார்? விவேகானந்தர்

59) விவேகானந்தர் பிரம்ம சமாஜத்தில் யார் தலைமையில் இருந்த போது உறுப்பினர் ஆனார்? கேசவசந்திரசென்

60) எந்த ஆண்டு விவேகானந்தர் கன்னியாகுமரி சென்று தியானம் செய்யத் தொடங்கினார்? 1892

61) விவேகானந்தர் எந்த ஆண்டு உலக சமய மாநாட்டில் பேசினார்? 1893, செப்டம்பர் 11 (மதகுரு கிப்பன்ஸ் தலைமையில் மாநாடு)

62) விவேகானந்தர் மதுரையில் யாரைச் சந்தித்தார்? 1892 ல் மன்னர் பாஸ்கரசேதுபதி

63) விவேகானந்தர் நியூயார்க்கில் தொடங்கிய சங்கத்தின் பெயர் என்ன? 1896 வேதாந்த சங்கம்

64) ராமகிருஷ்ண இயக்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? 1897, பேலூர்

65) விவேகானந்தர் பொன்மொழிகள்

விழுமின், எழுமின் குறிக்கோளை அடையும்வரை நில்லாது உழைமின், பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது என்று கூறினார்.

66) பிரம்மஞான சபை யாரால் தொடங்கப்பட்டது?

TNPSC MATERIAL KRISHOBA

பிரம்மஞான சபை ஹெலினா பெட்ரோவ்னா பிளாவாட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பவரும் 1875-இல் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில்

67) பிரம்மஞான சபை என்னவென்று அழைக்கப்படுகிறது? தியோஸ்சோபி (தியோஸ் என்றால் கடவுள், சோபாஸ் என்றால் அறிவு)
68) பிரம்மஞான சபையின் தலைமையிடம் 1882 ல் எங்கு மாற்றப்பட்டது? சென்னை அடையார்
69) பிரம்மஞான சபையின் வெற்றிக்கு பெரிதும் உதவியவர் யார்? அன்னிபெசன்ட்
70) அன்னிபெசன்ட் எங்கு பிறந்தார்? அயர்லாந்து 1847
71) அன்னிபெசன்ட் எப்போது இந்தியா வந்தார்? 1897
72) அன்னிபெசன்ட் காசியில் எந்தக் கல்லூரியைத் தொடங்கினார்? மத்திய இந்து கல்லூரி (பின்னாளில் பனாரஸ் பல்கலைக்கழகம்)
73) அன்னிபெசன்ட்டின் வீரமிக்க உணர்ச்சி சொற்பொழிவுகளின் தொகுப்பு எந்த பெயரில் நூலாக வெளியிடப்பட்டது? இந்தியனே விழித்தெழு
74) அன்னிபெசன்ட் நடத்திய இதழ்கள் – பொது வாழ்வு (1914) வார இதழ், நவ இந்தியா நாளிதழ்
75) பிரம்மஞான சபையின் கல்வி நிருவனங்கள் – ஆல்காட் நினைவுப் பள்ளி, ஆல்காட் நினைவு இடைநிலைப் பள்ளி
76) வள்ளலார் என போற்றப்பட்டவர் யார்? இராமலிங்க அடிகளார்
77) இராமலிங்க அடிகளாரின் பெற்றோர் யாவர்? ராமையா – சின்னம்மை, 1823 அக்டோபர் 5
78) இராமலிங்க அடிகளாரின் பாடல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது? திருவருட்பா
79) 1865 ல் இராமலிங்க அடிகளார் – சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
80) திருவருட்பா எத்தனை திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது? 6 திருமுறைகள்
81) முதல் நான்கு திருமுறைகள் யாரால் தொகுக்கப்பட்டன? இராமலிங்க அடிகளாரின் தலைமை சீடர் வேலாயுதனார்

TNPSC MATERIAL KRISHOBA

82) இராமலிங்க அடிகளாரின் படைப்புகள் யாவை? பதிபித்தவை – (சின்மயதீபிகை, ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம்), உரைநடைகள் – மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், திருவருட்பா

83) ஸ்ரீ நாரயண குரு எங்கு பிறந்தார்? செம்பழுந்தி, திருவனந்தபுரம், கேரளா 1856

84) ஸ்ரீ நாரயண குரு எவ்வாறு அழைக்கப்பட்டார்? நானு ஆசான்

85) ஸ்ரீ நாரயண குரு எந்த நூல்களை மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார்? திருக்குறள், ஈசோ வாஸ்யோ உபநிடதம், ஒளிவில் ஒடுக்கம்

86) ஸ்ரீ நாரயண குரு காலத்தில் வாழ்ந்த 2 வகையான மக்கள் யாவர்? அவர்ணர், சவர்ணர் (அவர்ணர் – கல்வி,சாஸ்த்திரம் கற்கக்கூடாது)

87) ஸ்ரீ நாரயண குரு எங்கு கோவிலைக் கட்டினார்? அருவிபுரம், திருவனந்தபுரம் (அவர்ணர்கள் இணைந்து கோவில் கட்டி பூஜை)

88) ஸ்ரீ நாரயண குரு நிறுவிய அமைப்பின் பெயர் என்ன? நாராயண தர்ம பரிபாலன யோகம் (1903)


89) ஸ்ரீ நாரயண குரு கருது – ஒரே சாதி, ஒரே சமயம், மனித குலத்திற்கு ஒரே கடவுள்

90) ஈழவ சமுதாயத்தில் காணப்படும் தீண்டாமை முறையை ஒழித்தவர் யார்? ஸ்ரீ நாரயண குரு

91) வைகுண்ட சுவாமிகள் எங்கு பிறந்தார்? சாமித்தோப்பு, கன்னியாகுமரி

92) வைகுண்ட சுவாமிகள் எவ்வாறு அழைக்கப்பட்டார்? முத்துக்குட்டி, முடிசூடும் பெருமாள்

93) வைகுண்ட சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று நூல்


உங்களுக்குத் தெரியுமா?

அகிலத்திரட்டுஅம்மானை என்ற நூல் வைகுண்ட சாமியின் வாழ்க்கை வரலாற்று பற்றிய நூல் ஆகும். இந்நூல் இவரது சீடர் இராமகோபால் என்பவரால் எழுதப்பட்டது.

TNPSC MATERIAL
KRISHOBA

94) வைகுண்ட சுவாமிகள் தோற்றுவித்த வழிபாட்டுத்தலங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? நிழல் தாங்கல்கள்

95) நிழல் தாங்கல்கள்

நிழல்தாங்கல்கள் ஐயா வைகுண்டரின் கொள்கைகளைப் பரப்பும் இடங்களாகவும், சாதி, இனம் கடந்து சமயநல்லிணக்கத்தையும் மனித நேயத்தையும் வளர்க்கும் இடங்களாகவும் விளங்குகின்றன. இவை தருமசாலையாகவும் விளங்கிவருகின்றன.

96) துவையல் பந்தி யாரால் தொடங்கப்பட்டது? வைகுண்ட சுவாமிகள்

97) வங்காளத்தில் சமூக சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் யார்? ஈஸ்வர சந்திர வித்யாசாகர் ஆவார் (1820 ல் பிறந்தார்)

98) ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பன்முகத்தன்மை என்ன? எழுத்தாளர், தத்துவஞானி, கல்வியாளர்

99) வங்க அகரவரிசையை மறு உருவாக்கம் செய்தவர் யார்? ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

100) வங்காள ஹூக்ளி பாலத்திற்கு யார் பெயர் சூட்டப்பட்டது? ஈஸ்வர சந்திர வித்யாசாகர் (வித்யாசாகர் பாலம்)

101) விதவை மறுமணச் சட்டம்

ஈஸ்வர சந்திர வித்தியாசாகரும், மகாதேவ் ரானடேவும் விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பினர். இந்நிலையில் விதவைகள் மறுமணச்சட்டம் 1856-இல் டல்ஹௌசி பிரபுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கானிங் பிரபு ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

102) ஜோதிபாபூலே எங்கு பிறந்தார்? பூனா, மாராத்திய மாநிலம்

TNPSC MATERIAL KRISHOBA

103) ஜோதிபாபூலே எங்கு பெண்கள் பள்ளியைத் தொடங்கினார்? புத்வார் பீத்

104) ஜோதிபாபூலே எங்கு ஆசிரியராகச் சேர்ந்தார்? ஸ்காட்டிஷ் பள்ளி

105) விவசாயிகளுக்காக இரவுப் பள்ளியைத் தொடங்கியவர் யார்? ஜோதிபாபூலே

106) ஜோதிபாபூலே எந்தக் குழுவிடம் தாழ்த்தப்பட்டோர் கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறினார்? ஹண்டர் கல்விக் குழு

107) உண்மை அறியும் சங்கம் (சத்தியசோதக்சமாஜம்) என்ற அமைப்பை ஏற்படுத்தியவர் யார்? ஜோதிபாபூலே

108) தமிழ் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்? அயோத்தியதாசப் பண்டிதர்

109) அயோத்தியதாசப் பண்டிதரின் இயற்பெயர் என்ன? காத்தவராயன்

110) அயோத்தியதாசப் பண்டிதர் எந்தக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்? அத்வைத கோட்பாடு

111) ஒரு பைசாத் தமிழன் என்ற இதழை வெளியிட்டவர் யார்? அயோத்தியதாசப் பண்டிதர், 1907, ராயப்பேட்டை தலைமையிடம் , காலணா மதிப்பு

112) ஒரு பைசாத் தமிழன் இதழ் என்னவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது? தமிழன்

113) அயோத்தியதாசப் பண்டிதர் யாரிடம் கல்வி கற்றார்?

அயோத்திதாசப் பண்டிதர், வல்லக்காளத்தி அயோத்திதாசப்பண்டிதரிடம் (1836-1900) கல்விகற்றார். தமிழ், சித்த மருத்துவம், தத்துவம் ஆகியவை பயின்றார். தம்

114) தெலுங்கு மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை யார்? கந்துகூரி வீரேசலிங்கம்

115) கந்துகூரி வீரேசலிங்கம் எங்கு பிறந்தார்? 1848, இராஜமுந்திரி

116) கந்துகூரி வீரேசலிங்கம் தொடங்கிய இதழின் பெயர் என்ன? விவேகவர்த்தினி (பெண் கல்வியை ஊக்குவிக்க), 1876

TNPSC MATERIAL
KRISHOBA

**117) கந்துகூரி வீரேசலிங்கம் எந்த ஆண்டு பொதுப்பள்ளியை நிறுவினார்?**
**1874 ல் (1908 ல் ஹித்காரினி பள்ளி)**

**118) கந்துகூரி வீரேசலிங்கம் எந்த ஆண்டு ஆந்திராவில் விதவைகள் திருமணத்தை நடத்தி வைத்தார்? 1881 ல்**

**119) பெரியார் எங்கு எப்போது பிறந்தார்? 1879 ல் செப்டம்பர் 17 ஈரோடு**

**120) எந்த இதழ்கள் மூலம் தமது சுயமரியாதைக் கருத்துக்களை வெளியிட்டார்? குடியரசு, புரட்சி, விடுதலை**

**121) சுயமரியாதை இயக்கம் – 1925**

**122) பெரியாரை யுனஸ்கோ எவ்வாறு புகழ்ந்தது? புத்துலக தொலை நோக்காளர், தென்னிந்தியாவின் சாக்ரடீஸ் (1973)**

**123) பெரியாரின் முதாலவது சமுதாயப் போராட்டம் எது? வைக்கம் போராட்டம்**

---

TNPSC MATERIAL KRISHOBA

அறைகூவல் விடுக்கப்பட்டது? மா.பொ.சி (மா.பொ.சிவஞானம்)

96 இந்த பெயர் மாற்றக் கோரிக்கைக்காகசாகும் உண்ணா நோன்பினை ஜூலை 27, 1956 அன்று ஆரம்பித்தவர் யார்? மகாத்மா காந்தியின் சீடரும், சுதந்திர போராட்ட வீரருமான விருதுநகர் சங்கரலிங்கனார்

97 சங்கரலிங்கனார் எந்த ஆண்டு காலமானார்? அக்டோபர் 13, 1956 அன்று 76-வது நாள்

98. 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியை தழுவிய கட்சி எது? காங்கிரஸ்

99. திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய ஆண்டு என்ன? 1967

100.மாபெரும் தேச கட்டமைப்பாளர்கள் யாவர்? மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேரு

---

## அலகு 4

## தமிழர் கலைகள்

1. மணிமேகலை காப்பியம் கலைகளை எத்தனை என்று குறிப்பிட்டுள்ளது ? 64

2. "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை" என்ற பாடல் வரியின் ஆசிரியர் ? கம்பர்

3. அழகு கலைகளை ஐந்தாக வகைப்படுத்தி கூறியவர் ? தமிழ் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி

TNPSC MATERIAL
HOBA

4. மனை நூல்களை நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம் எனக்கூறியவர் ? இளங்கோவடிகள்

5. பொ ஆ ஏழாம் நூற்றாண்டில் முதல் குடைவரை கோவிலை அமைத்தவர் ? மகேந்திரவர்ம பல்லவன்

6. முதல் குடைவரை கோயில் எங்கு அமைக்கப்பட்டது ? விழுப்புரம் மாவட்டம் மண்டகப்பட்டு

7. முற்கால பாண்டியர்கள் அமைத்த முதல் குடைவரை கோயில் ? பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில்

8. ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கல் கோயில் தமிழகத்தில் எங்கு உள்ளது ? மாமல்லபுரத்தின் மகிசாசுரமர்த்தினி கோயில்

9. கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு _______ என்று பெயர் ? கற்றளிகள்

10. கிபி ஏழாம் நூற்றாண்டில் யாருடைய காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது ? நரசிம்மவர்மன் காலத்தில்

11. இந்திய கட்டிடக்கலையின் மூன்று வகைகள் ? நாகரம், வேசரம், திராவிடம்

12. சிகரத்தின் அமைப்பானது நான்கு பக்கங்களைக் கொண்டு சதுரமாக அமைத்திருந்தால் அந்த விமானம் ___ எனப்படும் ? நாகரம்

13. சிகரம் வட்ட வடிவமாக இருப்பின் அந்த விமானம் ____ எனப்படும் ? வேசரம்

14. சிகரம் ஆனது எட்டுப் பட்டை அமைப்புடன் இருந்தால் அந்த விமானம் ___ எனப்படும் ? திராவிடம்

15. இந்தியாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பௌத்த சமய கட்டடக்கலை ? வேசரம்

16. தென்னிந்தியக் கோயில் கட்டடக் கலை வகை ? திராவிடம்

TNPSC MATERIAL
KRISHOBA

17. இந்து கோயில்களில் கர்ப்பகிரகம் என்னும் கருவறையின் மீது அமைக்கப்படும் பிரமிடு போன்ற கட்டடக்கலை ____ என்பர் ? விமானம்

18. விமானத்தை பொதுவாக ______ என்பர் ? ஷடங்க விமானம்

19. ஷடங்க விமானம் எத்தனை உறுப்புகளை குறிக்கும் ? 6

20. முதன்முதலில் சிறு கோபுரம் யாருடைய காலத்தில் எங்கு அமைக்கப்பட்டது ? ராஜசிம்மன் காலத்தில் , கைலாசநாதர் கோயிலில்

21. யாருடைய காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் அமைக்க தொடங்கினர் ? கிருஷ்ணதேவராயர்

22. கிருஷ்ணதேவராயர் பெரிய கோபுரங்களை அமைத்து இடங்கள் ? காஞ்சிபுரம் திருவண்ணாமலை சிதம்பரம்

23. காஞ்சி கைலாசநாதர் கோவில் யாரால் கட்டப்பட்டது ? ராஜசிம்மன்

24. பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்கு சான்று ? கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோவில்

25. தென்னகத்து எல்லோரா என அழைக்கப்படும் கோவில் ? கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோவில்

26. பாண்டியர் காலத்து கட்டிடக்கலைக்கு சிறந்த சான்றாக திகழ்வது ? திருப்பத்தூர் திருக்கற்றளி நாதர் கோயில்

27. புதுக்கோட்டையில் உள்ள நார்த்தாமலை கோவில் யாரால் கட்டப்பட்டது ? விஜயாலய சோழன்

28. காவிரி ஆற்றின் இரு பக்கங்களையும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டியவர்? ஆதித்த சோழன்

29. பிரம்மபுரீசுவரர் கோவில் யாரால் கட்டப்பட்டது ? பராந்தக சோழன்

TNPSC MATERIAL KRISHOBA

30. தென்னகத்தின் மேரு என அழைக்கப்படும் கோவில் ? தஞ்சை பெரிய கோவில்

31. கடம்பவனேஸ்வரர் கோவில் யாரால் கட்டப்பட்டது ? பராந்தக சோழன்

32. தஞ்சை பெரிய கோவிலின் 216 அடி உயரமும் பதிமூன்று அடுக்குகள் கொண்ட விமானத்தை அமைத்து ராஜ ராஜேஸ்வரம் என பெயரிட்டவர் ? ராஜராஜன்

33. தஞ்சை பெரிய கோவிலின் முதல் வாசல் ____ என்றும் இரண்டாம் வாசல் ____ என்றும் அழைக்கப்படுகிறது ? முதல் வாசல் --- கேரளாந்தகன் திருவாசல், இரண்டாவது வாசல் ----------------- ராஜராஜன் திருவாசல்

34. தஞ்சை பெரிய கோவிலின் 80 டன் எடை கொண்ட சிகரம் எந்த ஆண்டு யுனெஸ்கோவால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது ? 1987

35. தஞ்சை பெரிய கோவிலின் உயரம் மற்றும் யாரால் கட்டப்பட்டது? முதலாம் ராஜராஜ சோழன், 216 அடி உயரம்

36. கங்கைகொண்ட சோழபுரம் யாரால் கட்டப்பட்டது மற்றும் அதன் உயரம் என்ன ? முதலாம் ராஜேந்திர சோழன், 170 அடி உயரம்

37. திருபுவனம் கம்பகரேஸ்வரர் கோயில் யாரால் கட்டப்பட்டது மற்றும் அதன் உயரம் ? மூன்றாம் குலோத்துங்க சோழன், 126 அடி உயரம்

38. சிற்பக்கலையின் தோற்றுவாயாக கருதப்படுவது ? நடுகற்கள்

39. நடுகல் ______ எனவும் ______ எனவும் அழைக்கப்படும் ? நினைவுக்கல் அல்லது வீரக்கல்

40 . சுதை என்பது சுண்ணாம்பு நன்கு அரைத்து கரும்பு சாறு நெல்லிக்காய் சாறு ஆகியவற்றை கலந்து அரைத்து வைத்திருக்கும் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது என குறிப்பிட்டவர் ? . தட்சிணாமூர்த்தி

TNPSC MATERIAL KRISHOBA

41. ஒரு உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழு வடிவமாக வடித்தல் _______ சிற்பமாகும் ? தனி சிற்பம்

42. தமிழகத்தில் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலையை பயிற்றுவிக்கும் அரசு கல்லூரி எங்கு உள்ளது ? மாமல்லபுரம்

43. தனிப்பட்ட ஒருவரின் உருவ அமைப்பை உள்ளது உள்ளவாறு அமைப்பது _____ எனப்படும் ? பிரதிமைகள்

44. நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் யார் காலத்து குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன ? மகேந்திரவர்மன் காலத்து

45. ஒரே கல்லால் வடிவமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய நந்தி சிற்பம் எங்கு உள்ளது ? ஆந்திராவிலுள்ள அனந்த்பூர் மாவட்டத்தில் லெபாசி என்ற ஊர்

46. இந்தியாவில் உள்ள நந்தி சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பம் எங்கு உள்ளது ? தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்

47. நாயன்மார்களின் வாழ்க்கை யைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ள கோவில் ? இரண்டாம் ராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயில்

48. சோழர்கால செப்புத் திருமேனிகளின் உலகப்புகழ் வாய்ந்தது? நடராஜர் சிலை

49. வட்டிகைச் செய்தி சித்திரை செய்தி என்பது எதை குறிக்கிறது? ஓவியத்தை

50. புனையா ஓவியம் என்று அழைக்கப்படுபவை ? கோட்டோவியங்கள்

51. கோட்டோவியங்கள் ___ என்றும் அழைப்பர் ? வரிவடிவ ஓவியம்

52. முதன்முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி எந்த நூலில் கிடைத்தது ? நெடுநல்வாடை

53. புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களை புனைந்து அமைக்கும் ஓவியம் ? முழு ஓவியம்

TNPSC MATERIAL KRISHOBA

54. ஓவியம் வரைபவரை எவ்வாறு அழைப்பர் ? ஓவியன், கண்ணுள் வினைஞர், கைவினைஞர், ஓவிய வல்லோன், ஓவியப் புலவன்

55. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்தது குறிப்பிடும் நூல் ? நக்கீரர் எழுதிய நெடுநல்வாடை

56. சித்தன்னவாசலில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் தமிழகத்தில் எங்கு உள்ளது ? புதுக்கோட்டை மாவட்டம்

57. ," பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்" என்று எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது ? மாங்குடி மருதனார் எழுதிய புறநானூறு

58. படம் என்ற சொல் _____ என்ற சொல்லிலிருந்து தோன்றியது ? படாம்

59. இசை நுணுக்கம் என்னும் நூல் _______ என்னும் பாண்டிய இளவரசன் ஆல் இயற்றப்பட்டது ? சயந்தன்

60. தேவாரங்களை பண் சுமந்த பாடல் என்று கூறியவர் ? மாணிக்கவாசகர்

61. சிலப்பதிகாரத்தில் மாதவி எத்தனை வகை ஆடல்களை ஆடினாள் ? 11 வகை

62. மூர்த்தி எத்தனை வகைப்படும் மற்றும் அதன் வகைகள் ? இரண்டு வகைப்படும். அவைகள் வேத்தியல் கூத்து மற்றும் பொதுவியல் கூத்து

63. மகளிரால் ஆடப்படும் கூத்து ? குரவைக் கூத்து

64. முதலாம் மகேந்திரவர்மன் __________ என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார் ? மத்த விலாச பிரகசனம்

65. பிள்ளைத்தமிழ் குழந்தைகளுக்கான எத்தனை பருவங்களை குறிக்கின்றது ? 10

TNPSC MATERIAL
KRISHOBA